**கோடீஸ்வரி 2019-ல் ('KOD2019') பங்கேற்பதற்கான விதிகள் & ஒழுங்குமுறைகள் / விதிகள் & நிபந்தனைகள்**

**I.** போட்டி பற்றிய விளக்கம்:

""KOD 2019" என்பது ஒரு வினாடி வினா அடிப்படையிலான முக்கியமாக தமிழில் தொடக்கத்தில் கலர்ஸ் தமிழ்-ல் ("சேனல்") நடத்தப்படும் கேம் ஷோவாகும். இது, வியாகாம்18 மீடியா பிரைவேட் லிமிடெட்-டினால் ('வியாகாம்18'/ 'நிறுவனம்') மற்றும் / அல்லது அதன் துணை அமைப்புகளால் நடத்தப்படுகிறது.

**II.** வரையறைகள்

1. **"ஆடிஷன்ஸ்":** என்றால், தேர்ந்தெடுக்கப்பட்ட போட்டியாளருக்கு(களுக்கு) தெரிவிக்கப்பட்ட குறிப்பிட்ட நாட்களில் பல்வேறு நகரங்களில் நடத்தப்படும் கிரவுண்டு ஆடிஷன்ஸ் ஆகும்.
2. **"ஆடிஷனீ(ஸ்)":** ஆடிஷனில் பங்கேற்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பதிவுசெய்தவர்(கள்).
3. **"பேக்-அப் பங்கேற்பாளர்(கள்)":** எந்த ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கேற்பாளர்(கள்)-ம் எந்த ஒரு காரணத்திற்காகவும் ஸ்டுடியோவில் படப்பிடிப்புக்கு வராதிருந்தால் மட்டும் போட்டியின் ஃபாஸ்டஸ்ட் ஃபிங்கர் ஃபர்ஸ்ட்-ல் பங்கேற்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆடிஷனீ(கள்).
4. **"நிறுவனம்/வியாகாம்18":** போட்டியை ஒருங்கமைப்பவர்களான வியாகாம்18 மீடியா பிரைவேட் லிமிடெட் மற்றும் / அல்லது அதன் துணை அமைப்புகள்.
5. **"போட்டி"**: "கோடீஸ்வரி-2019" எனத் தலைப்பிடப்பட்டுள்ள பொது அறிவு வினாடிவினா.
6. **"போட்டியாளர்(கள்):** பதிவுசெய்தவர்(கள்), ஆடிஷனீ(ஸ்), பங்கேற்பாளர்(கள்), பேக்-அப் பங்கேற்பாளர்(கள்), ஹாட் சீட் போட்டியாளர்(கள்) ஆகிய எல்லாருமே மொத்தமாக "போட்டியாளர்(கள்)" எனக் குறிப்பிடப்படுவார்கள்.

7. “செலிபிரிட்டி ஸ்பெஷல்/ஸ்”: செலிபிரிட்டி சீட் போட்டியாளர்(கள்)-உடன் சிறப்பாக பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சியின் எந்த ஒரு எபிசோடும்(களும்).

8. “பங்களிப்பவர்”: எந்த ஒரு ஆடிஷன், போட்டி, ஸ்டுடியோ, நிகழ்ச்சி மற்றும் / அல்லது காட்சியில் பங்கேற்கும், கலந்துகொள்ளும் மற்றும் / அல்லது இருக்கும் போட்டியாளர்(கள்) தவிர்த்த எந்த ஒரு நபரும்.

9. “எபிசோடு” ஒரு நிகழ்ச்சியின் ஒரு தொடர்நிகழ்வு

10. “ஃபாஸ்டஸ்ட்-ஃபிங்கர் ஃபர்ஸ்ட் **(‘FFF’)”** என்றால், தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கேற்பாளரிடம்(களிடம்) ஒரு கேள்வி கேட்கப்பட அதற்கு அவர்(கள்) பதிலளிக்கும் நிகழ்ச்சியின் பாகத்தைக் குறிக்கிறது.

11. “ஹாட் சீட் போட்டியாளர்(கள்)” என்றால் போட்டியில் மேலும் பங்கேற்பதற்கு நிகழ்ச்சியின் ஹோஸ்ட்டுக்கு முன்னர் ஹாட் சீட்டுக்குச் செல்லும் ஃபாஸ்டஸ்ட் ஃபிங்கர் ஃபர்ஸ்ட் சுற்றில் வெற்றிபெறும் போட்டியாளர் என்று பொருள்.

12. “பங்கேற்பாளர்(கள்)” போட்டியின் ஃபாஸ்டஸ்ட் ஃபிங்கர் ஃபர்ஸ்ட் சுற்றில் பங்கேற்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆடிஷனீ(கள்).

13. “போன்-எ-ஃபிரண்டு / வீடியோ-கால் கேன்டிடேட்(ஸ்)”: போன்-எ-ஃபிரண்டு / வீடியோ-கால் கேன்டிடேட்டாக ஹாட் சீட் போட்டியாளரால் தேர்ந்தெடுக்கப்படும் ஹாட் சீட் போட்டியாளரின் ஒரு நண்பர். போன்-எ-ஃபிரண்டு / வீடியோ-கால் கேன்டிடேட்(ஸ்) அக்டோபர் 27, 2019 அன்றைய நிலவரப்படி 18 வயதுக்கு மேற்பட்டவராகவும், இந்தியாவில் உள்ள இந்திய நாட்டவராக இருக்க வேண்டும்.

14. “தயாரிப்பாளர்”: என்றால் சோனி பிக்சர்ஸ் நெட்வொர்க்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்டின் ஒரு பிரிவான ஸ்டுடியோ நெக்ஸ்ட்டின் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் என்று பொருள்.

15. "நிகழ்ச்சி": படப்பிடிப்பு உட்பட ஆடிஷன் சுற்று தொடங்கி (எந்த சீசனல் ஸ்பெஷல்/கள் / செலிபிரிட்டி ஸ்பெஷல், பேக்ஸ்டேஜ் ரெக்கார்டிங் மற்றும் போட்டியாளரின்(களின் வாழ்க்கையை

சித்தரிக்கும் போட்டியாளர்(கள்), அவர்களுடைய குடும்பம், நண்பர்கள் முதலானவர்கள் அடங்கிய எந்த ஒரு பதிவும் உட்பட) போட்டியின் பதிவுகள்.

16. "பதிவு செய்தவர்(கள்)": போட்டியில் கலந்துகொள்ளும் (i) அக்டோபர் 27, 2019 அன்றைய நிலவரப்படி பதினெட்டு (18) வயதுக்கு மேற்பட்டவர்; (ii) இந்தியாவில் வாழும் இந்தியர், (iii) ஒரு பெண், (iv) நல்ல ஆரோக்கியமும் உளப்பாங்கும் உள்ளவர், மற்றும் (v) கீழே கொடுக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளின் போட்டியில் நுழையும் எந்த ஒரு நபரும்(களும்). அவ்வப்போது நியமிக்கப்படும் வியாகாம்18-ன் தொழிலாளர்கள், தயாரிப்பாளர், விளம்பர முகமை, மற்றும் ஸ்பான்சர்களின் தொழிலாளர்கள், அவர்களுடைய குடும்பங்கள், இந்திய நாட்டவர் அல்லாதவர்கள், அல்லது இந்தியாவிற்கு வெளியில் வாழும் இந்திய நாட்டவர்கள், அல்லது வருமானவரி சட்டம், 1961-ன்படி இந்திய நாட்டவர் என்ற வரையறையின்கீழ் தகுதிபெறாதவர்கள், அல்லது பேச்சுத் தமிழில் புலமையில்லாதவர்கள், அல்லது போட்டியின் எந்த ஒரு முந்தைய சீசனிலும் எந்த ஒளிபரப்பப்பட்ட சுற்றுக்கும் வந்த பங்கேற்பாளர்கள் போட்டியில் கலந்துகொள்ள தகுதி பெற மாட்டார்கள்.

17. "விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள்": இங்கு குறிப்பிடப்பட்டுள்ள போட்டிக்குரிய இந்த விதிகளும் ஒழுங்குமுறைகளும் ஒட்டுமொத்தமாக, அவ்வப்போது திருத்தப்படலாம்.

18. "சீசனல் ஸ்பெஷல்/ஸ்": ஆண்டின் ஒரு குறிப்பிட்ட நேரத்தைக் கொண்டாடுவதற்காக சிறப்பாக பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சியின் எந்த ஒரு எபிசோடும்(களும்).

19. "கால அட்டவணை": நிறுவனத்தினால் முன்னரே தீர்மானிக்கப்பட்ட பதிவு செய்யப்பட வேண்டிய ஒரு எபிசோடு அல்லது எபிசோடுகள் மற்றும் / அல்லது பதிவு நாட்கள்.

20. "காட்சி": சேனலில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சியின் ஒவ்வொரு எபிசோடும் (எந்த ஒரு சீசனல் ஸ்பெஷல்/ஸ் அல்லது செலிபிரிட்டி ஸ்பெஷல்/ஸ் எபிசோட்/ஸ்)

21. “ஸ்டான்ட்-பை போட்டியாளர்”: எந்த ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கேற்பாளர்(கள்)-ம் எந்த ஒரு காரணத்திற்காகவும் ஸ்டுடியோவில் படப்பிடிப்புக்கு வராதிருந்தால் மட்டும் போட்டியின் FFF-ல் பங்கேற்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆடிஷனீ(கள்).

22. “காட்சி மேலாண்மை” : தயாரிப்பாளர், வியாகாம்18 உட்பட காட்சியின் ஏற்பாட்டாளர்கள்.

23. “ஸ்டுடியோ பாகம்": காட்சியின் அங்கமாகவோ இல்லாமலோ ஸ்டுடியோவில் நடக்கும் போட்டியின் பாகம்.

24. “ஸ்டுடியோ”: “பிரசாத் ஸ்டுடியோஸ், சென்னை” அல்லது போட்டிக்காக / போட்டியின் பகுதிக்காக / போட்டியின் விளம்பரத்திற்காக நிறுவனம் / தயாரிப்பாளர் முடிவெடுக்கும் பிற எந்த ஒரு ஸ்டுடியோ.

25. “வெற்றியாளர்”: நிகழ்ச்சியை நடத்துபவரால் கேட்கப்படும் எல்லாக் கேள்விகளுக்கும் சரியாகப் பதிலளிக்கும் ஹாட் சீட் போட்டியாளர்(கள்)

26. **“பயனர்”:** இங்கு உள்ள இந்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின்படி போட்டியில் பங்கேற்பதற்கு இங்கு குறிப்பிடப்பட்டுள்ளபடி தகுதி வறைகூறினைப் பூர்த்தி செய்யும், மற்றும் பதிவு செயல்முறையை (கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி) நிறைவு செய்யும் எந்த ஒரு தனி நபரும்.

27. **“Voot** செயலி” என்றால் வியாகாம்18-ன் மற்றும் அதனால் இயக்கப்படும் செயலியாகும். இதில்தான் காட்சிக்காக பதிவு செய்பவர்கள் பதிவு செய்ய முடியும்.

28. ”வலைதளம் / வலைதளப் பக்கம்” : http://www.colorstamil.in

## III. போட்டியில் பங்கேற்பதற்கான நடைமுறை:

லெவல் 1

1. ஒரு போட்டிக் கேள்விக்கு நான்கு (4) பல வாய்ப்பு பதில் தெரிவுகள் உண்டு. இவை ஒவ்வொரு நாளும் காட்சியின் விளம்பரத்தின்போது அக்டோபர் 28 2019 முதல் நவம்பர் 3, 2019-வரை ("முதல் சுற்றுக் காலக்கட்டம்") பொதுத் தொலைபேசிகளிலிருந்து (PCO) வரும் அழைப்புகள் தவிர்த்து தேர்ந்தெடுக்கப்பட்ட தொலைபேசிக்கும் (பிற்சேர்க்கை 1-ஐ பார்க்கவும்) மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட கைப்பேசி சந்தாதாரர்களுக்கும் (பிற்சேர்க்கை 1-ஐ பார்க்கவும்) தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்கிள்களுக்கு (பிற்சேர்க்கை 1-ஐ பார்க்கவும்), மற்றும் iOS மற்றும் ஆன்ட்ராய்டு தளங்களில் கிடைக்கும் Voot செயலியைக்கொண்டு பதிவு செய்யும் பயனர்களுக்கு கீழே 4-வது தலைப்பின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள முறைகளில், மொத்த ஏழு (7) தனித்துவமான கேள்விகள் முதல் சுற்றுக் காலக்கட்டத்தில் கேட்கப்படும். போட்டிக்காக பதிவு செய்யுமாறு பார்வையாளர்களை அழைக்கும் வகையில் விளம்பரம் செய்யப்படும். முதல் சுற்றுக் காலக்கட்டத்தின் ஒவ்வொரு கேள்விக்கும் தொலைபேசி அழைப்புகள் மற்றும் கைப்பேசி அழைப்புகள் மற்றும் SMS ஏற்பு, இருபத்து மூன்று மணி மற்றும் முப்பது நிமிடங்களுக்கு (23 மணி நேரம் மற்றும் 30 நிமிடங்கள்) அதாவது, இந்திய நேரப்படி முதல் நாள் இரவு 8:00:00 மணி முதல் அடுத்த நாள் இந்திய நேரப்படி இரவு 7:30:00 வரை மட்டும். விவரமான காலஅட்டவணை கீழே தரப்பட்டுள்ளது:

முதல் சுற்றுக் காலக்கட்டத்திற்கான கேள்வியின் காலஅளவு (PCO-விலிருந்து அழைக்கப்படும் அழைப்பு தவிர்த்து தொலைபேசி மற்றும் கைப்பேசி வைத்திருக்கும் எல்லா பார்வையாளர்களும் பங்கேற்கலாம்):

| கேள்வி எண் | லைன்ஸ் ஓப்பன் | | லைன்ஸ் குளோஸ் | |
|---|---|---|---|---|
| | தேதி | நேரம் | தேதி | நேரம் |
| 1 | 28-அக்-2019 | 8:00:00 பி.ப | 29-அக்-2019 | 7:30:00 பி.ப |
| 2 | 29-அக்-2019 | 8:00:00 பி.ப | 30-அக்-2019 | 7:30:00 பி.ப |
| 3 | 30-அக்-2019 | 8:00:00 பி.ப | 31-அக்-2019 | 7:30:00 பி.ப |
| 4 | 31-அக்-2019 | 8:00:00 பி.ப | 01-நவ-2019 | 7:30:00 பி.ப |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | 01-நவ-2019 | 8:00:00 பி.ப | 02-நவ-2019 | 7:30:00 பி.ப |
| 6 | 02-நவ-2019 | 8:00:00 பி.ப | 03-நவ-2019 | 7:30:00 பி.ப |
| 7 | 03-நவ-2019 | 8:00:00 பி.ப | 04-நவ-2019 | 7:30:00 பி.ப |

2. பங்கேற்பதற்காக அழைப்புகள் மற்றும் / அல்லது iOS / ஆன்ட்ராய்டு தளங்களில் Voot செயலியைப் பயன்படுத்தி பதிவுகள் மற்றும் / அல்லது SMS (இவை அனைத்தும் இணைந்து “நுழைவு” எனப்படும்) தொலைபேசி லைன்களை மூடுவதற்கு முன்னர் நிறைவு செய்யப்பட வேண்டும். அப்போதுதான் அது செல்லத்தக்க நுழைவு (”செல்லத்தக்க நுழைவு(கள்)”) எனக் கருதப்படும்.

3. **பதிவு எந்தக் கைப்பேசி / தொலைபேசி எண்ணிலிருந்து பதிவு பெறப்படுகிறதோ அதுவே பதிவு செய்தவரை அடையாளம் காண்பதற்கான தனித்த அடையாள எண்ணாகப் பயன்படுத்தப்படும்**. **ஒவ்வொரு பதிவு செய்பவரும் பல பதிவுகளைச் சமர்ப்பிக்கலாம்**. **ஒவ்வொரு நாளும் அனுப்பப்படும் செல்லத்தக்க நுழைவுகள் மட்டுமே அந்த நாளுக்கான சமவாய்ப்பாக்கல் தெரிவு செயல்முறைக்குக் கருதப்படும்** (**ஒரு நாள் என்பது** 23 **மணி மற்றும்** 30 **நிமிட காலம் அதாவது இரவு** 8:00:00 k**ணி முதல் அடுத்த நாள் இரவு** 7:30:00 **மணிவரை**).

4. நுழைவுக் கேள்விக்கான ஒவ்வொரு அழைப்புக்கும் ஒவ்வொரு நுழைவு முறையின் வழியாகப் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கைப்பேசி எண்ணுக்கும் முதலாவது சரியான நுழைவு மட்டுமே.

5. போட்டியில் பங்கேற்பதற்கு, சரியான தெரிவைத் தேர்ந்தெடுத்து சரியான பதிலை பதிவு செய்பவர் கொடுக்க வேண்டும்.கீழே உள்ள கட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள முறையிலும் காட்சியின் விளம்பரத்தில் குறிப்பிட்ட முறையிலும் நுழைவை அனுப்ப வேண்டும்:

பிற்சேர்க்கை 1-ன்படி (PCO-விலிருந்து வரும் எந்த அழைப்புகளையும் தவிர்த்து) கைப்பேசி மற்றும் தொலைபேசி சந்தாதாரர்களுக்கு) IVR தெரிவு தொலைத்தொடர்பு அளிப்பவர்களுக்குக் கிடைக்கும்.

| பங்கேற்கும் முறை | டயல் செய்ய | பங்கேற்புக்கான |
|---|---|---|

| | வேண்டிய / எஸ்எம்எஸ் செய்ய வேண்டிய எண் | கட்டணங்கள் |
|---|---|---|
| ஐவிஆர் (IVR) | 5056882 01-04 | நிமிடத்திற்கு ரூ. 7/- வரை** |
| எஸ்எம்எஸ் | 509093 | ஒவ்வொரு எஸ்எம்எஸ்-க்கும் ரூ. 3/-வரை |
| Voot செயலி | Voot செயலியில் வரையறுக்கப்பட்ட ஃபுளோவின்படி | தரப்படுத்தப்பட்ட தரவுக் கட்டணங்கள் |

**பொருந்தும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் காரணமாக விலைகள் மாற்றத்திற்குட்பட்டது. தயவுசெய்து உங்களுடைய தொலைத்தொடர்பு நிறுவனங்களிடம் கட்டணத்தைச் சரிபார்த்துக் கொள்ளவும். வேறொரு சர்க்கிளில்/வட்டாரத்தில்/நாட்டில் பயணம் செய்யும்போது ஏதாவது ஒரு பயனர் பதிவு செய்தால், கூடுதல் ரோமிங் கட்டணம் பொருந்தலாம். பொருந்தும் கட்டணங்களுக்கு. தயவுசெய்து உங்களுடைய தொலைத்தொடர்பு நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளவும். மேலும், உங்களுடைய தொலைத்தொடர்பு நிறுவனங்களிடம் வேறு எந்த ஒரு பொருந்தும் கட்டணங்களையும் சரிபார்த்துக் கொள்ளவும்.

பின்னிணைப்பு 1-ல் விவரிக்கப்பட்டுள்ளபடி 509093 என்ற குறுகிய குறியீடு தேர்ந்தெடுக்கப்பட்ட தொலைத்தொடர்பு நிறுவனங்கள் மற்றும் சர்க்கிள்களில் கிடைக்கும்.

<u>எஸ்எம்எஸ் வழியாக எப்படிப் பதிலளிப்பது?</u>

முதல் சுற்றுக் காலக்கட்டம்

a. KOD<இடைவெளி>A/B/C/D<இடைவெளி><வயது(அக். 27, 2019-ன்படி நிறைவடைந்த ஆண்டுகள்)>

உதாரணமாக KOD A 24

b. கீழ்க்காணும் தரவுப் புலங்கள் சேமித்து வைக்கப்படும் (1) எஸ்எம்எஸ் எந்த எண்ணிலிருந்து வந்ததோ அந்த எண் (2) செய்தி (3) எஸ்எம்எஸ் பெறப்பட்ட நாள் (4) பெற்ற நேரம்

c. எஸ்எம்எஸ் வடிவத்தில் பிழை இருந்தால், அதற்கு பதில் செய்தியாக "Invalid entry. சரியான வடிவம் KOD (இடைவெளி)(பதில்(A/B/C/D)(இடைவெளி)(வயது(நிறைவநடைந்த ஆண்டுகள்)). விதிகள் மற்றும் நிபந்தனைகள் http://www.colorstamil.in -ல் கிடைக்கும், ஒவ்வொரு எஸ்எம்எஸ்-க்கும் ரூ. 3/-வரை".

d. பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் அனுப்பப்பட்ட நுழைவுகளுக்கான ஒப்புகை செய்தி "KOD-க்கு பதிவு செய்ததற்கு நன்றி. அடுத்த சுற்றக்கு நீங்கள் தேரிவு செய்யப்பட்டால், இந்த எண்ணில் நாங்கள் உங்களைத் தொடர்பு கொள்வோம்" என்று இருக்கும். விதிகள் மற்றும் நிபந்தனைகள் on http://www.colorstamil.in -ல் கிடைக்கும். ஒவ்வொரு எஸ்எம்எஸ்-க்கும் ரூ. 3/-வரை"

**IVR வழியாக எப்படிப் பதிலளிப்பது?**

a. அழைக்கவும் 5056882 01/02/03/04 (அதாவது 5056882-ஐ அழைத்து பதில் A-க்கு 01-ஐயும், பதில் B-க்கு 02-ஐயும், C-க்கு 03-ஐயும் பதில் D-க்கு 04-ஐயும் அழுத்தவும்). IVR தமிழில் மட்டுமே இருக்கும்.

b. பதிவு செய்தவர் தன்னுடைய முழுமையடைந்த வயதை (உதாரணமாக, ஒருவருடைய வயது 25 ஆண்டுகள் மற்றும் 11 மாதங்கள் என்றால், அவர் 25 என்று பதிவு செய்ய வேண்டும்) குறிப்பிடும்படியும் அதை உறுதிப்படுத்தும்படியும் கேட்டுக்கொள்ளப்படுவார்.

c. நன்றி என்று குறிப்பிட்டு / பிளே பேக் ஆப்ஷனுடன் அந்த அழைப்பு நிறைவடையும்.

IVR சமயத்தில் கேட்கப்படும் எந்த ஒரு தகவலும், IVR-ன் அறிவுறுத்தல்படி பதிவு செய்தவரால்(களால்) ஆறு (6) நொடிகளுக்குள் கொடுக்கப்படாவிட்டால், அந்த அறிவுறுத்தல் மீண்டும் கொடுக்கப்படும்.

அடுத்த ஆறு (6) நொடிகளுக்குப் பின்னரும் பதில் பெறப்படாவிட்டால், அழைப்பைத் துண்டிப்பதற்கான செய்தி அளிக்கப்பட்டு அழைப்பு முடிவடையும். சரியான வடிவத்தில் பதில் கிடைக்காவிட்டால், அல்லது ஏற்கப்பட்ட பதில் தெரிவுகளுக்குள் இல்லாவிட்டால், கேள்வி மீண்டும் ஒருமுறை கேட்கப்படும். இரண்டாவது முறையும் செல்லாத பதில் கிடைத்தால், அழைப்பைத் துண்டிப்பதற்கான செய்தி அளிக்கப்பட்டு அழைப்பு முடிவடையும். அழைப்பு வடிவத்தில் பதில் கிடைத்தால், பதிவு செய்தவர் தன்னுடைய பதிவை உறுதிப்படுத்தும்படி அல்லது தன்னுடைய பதிலை மீண்டும் பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுவார். பதிவு செய்தவர் தான் அளித்த பதிலை இரண்டாவது முறை உறுதிப்படுத்தாவிட்டால், அழைப்பைத் துண்டிப்பதற்கான செய்தி அளிக்கப்பட்டு அழைப்பு முடிவடையும்.

முதல் சுற்று காலக்கட்டத்திற்கு IVR தெரிவு கிடைக்கும் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் பின்னிணைப்பு 1-ல் விவரிக்கப்பட்டுள்ளது.

பதிவு எண்களுக்கு அழைக்கப்படும் எல்லா அழைப்புகளுக்கும் நிமிடத்திற்கு ரூ. 7/-வரை கட்டணம் விதிக்கப்படும்.

**ரோமிங் கட்டணங்கள் பொருந்தலாம். பொருந்தும் கட்டண விகிதங்களை அறிய பதிவு செய்பவர் தொலைத்தொடர்பு நிறுவனத்தைத் தொடர்பு கொள்ள வேண்டும்.**

**<u>iOS மற்றும் ஆன்ட்ராய்டு கைப்பேசிகளில் கிடைக்கும் Voot செயலியைப் பயன்படுத்தி எப்படிப் பங்கேற்கலாம் (டேட்டா-இயலச்செய்யப்பட்ட கைப்பேசிகளில் கிடைக்கும், இதற்கு டேட்டா நெட்வொர்க் கிடைக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு உங்களுடைய தொலைத்தொடர்பு நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளவும்)</u>**

1. **அப்ளிக்கேஷன் ஸ்டோரிலிருந்து** Voot **செயலியைப் பதிவிறக்கம் செய்யவும். செயலியை இலவசமாகத் தரவிறக்கும் செய்து கொள்ளலாம், ஆனால், அதற்கான தரவுக் கட்டணங்கள் பொருந்தும் என்பதை தயவுசெய்து அறிந்து**

**கொள்ளுங்கள்.. தன்னுடைய ஃபேஸ்புக் (முகநூல்) அல்லது ஜிமெய்ல் புகுபதிவைப் பயன்படுத்தி பதிவு செய்பவர் புகுபதிவு செய்ய வேண்டும். பதிவு செய்பவரிடம் தற்போது பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல் இல்லாவிட்டால், தேவைப்படும் கட்டாயமாக நிரப்ப வேண்டிய கட்டங்களை நிரப்பி ஒரு புதிய செல்லத்தக்க மின்னஞ்சல் முகவரியை உருவாக்கிக் கொள்ளலாம். கூடுதல் விவரங்களுக்கு உங்களுடைய தொலைத்தொடர்பு நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளவும்.**

2. **பதிவு செய்பவர் புகுபதிவு செய்து விட்டால், தன்னுடைய பதில் தெரிவை** (A/B/C/ D) **அவர் தேர்ந்தெடுக்கலாம்**

3. **தயவுசெய்து உங்களுடைய மின்னஞ்சல் முகவரியையும் கைப்பேசி எண்ணையும் உள்ளிடுங்கள். இந்தியாவில் உள்ள தொலைத்தொடர்பு நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட கைப்பேசி எண்ணாக இருந்தால் மட்டுமே நாங்கள் உங்களைத் தொடர்பு கொள்ள முடியும் என்பதை தயவுசெய்து மனதில் கொள்ளுங்கள்.**

4. **தயவுசெய்து உங்களுடைய முழுப் பெயரை உள்ளிடுங்கள்**

5. **தயவுசெய்து உங்களுடைய வயதை உள்ளிடுங்கள். அக்டோபர்** 27, 2019 **அன்றைய நிலவரப்படி** 18 **வயது பூர்த்தியடைந்தவர்கள் மட்டுமே இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கலாம் என்பதை தயவுசெய்து மனதில் கொள்ளுங்கள்.**

<u>லெவல் 2</u>

பெறப்பட்ட எல்லா பதிவுகளிலுமிருந்து சமவாய்ப்பாக்கல் மென்பொருளினால் மொத்தமாக தோராயமாக 14,000 (பதினான்காயிரம்) சரியான செல்லத்தக்க பதிவு செய்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

ஒரே கைப்பேசி எண்ணிலிருந்து வரும் பல பதிவுகள் சமவாய்ப்பாக்கல் மென்பொருளினால் கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டாலும், ஒரு கைப்பேசி எண் ஒருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டால், எந்த ஒரு

சுற்றின்போதும் அதே எண் இரண்டாவது முறையும் தேர்ந்தெடுக்கப்படாது.

ஒவ்வொரு நாளும் சமவாய்ப்பாக்கல் மென்பொருளினால் செல்லத்தக்க பதிவுகள் ஒவ்வொரு நாளுக்கும் தெரிவு செய்யப்படுவர் (இரவு 8:00:00 மணி முதல் அடுத்த நாள் இரவு 7:30:00 மணிவரை).

சமவாய்ப்பாக்கல் மென்பொருளினால் முதல் சுற்றுக் காலக்கட்டத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் செல்லத்தக்க பதிவுகள் நியாயமான முயற்சி அடிப்படையில் முன்னரே வரையறுக்கப்பட்ட வரைகூற்றை இதற்காகப் பயன்படுத்தும்.

| லெவல் 1 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| லெவல் 1 நடைமுறைக்கான கட்டம் (விழுக்காட்டில்) | | | பெண்கள் மட்டும் | | | |
| | | | 100.00% | | | |
| | | | 18-24 | 25-34 | 35-44 | 45+ |
| | | | 25% | 30% | 25% | 20% |
| மண்டலம் 1 | சென்னை | 20% | 5.0% | 6.0% | 5.0% | 4.0% |
| மண்டலம் 2 | இந்தியாவின் பிற பகுதிகள். | 80% | 20.0% | 24.0% | 20.0% | 16.0% |
| மொத்தம் | | | 100% | | | |

குறைவான செல்லத்தக்க பதிவுகள் காரணமாக சமவாய்ப்பாக்கல் மென்பொருளினால் சில கடடங்களை பூர்த்தி செய்ய இயலாவிட்டால், அவற்றை நிறுவனத்தின் முடிவின்படி நிரப்பலாம். எந்த ஒரு நாளும் கட்டம் நிரப்பப்படாதிருந்தால், அன்றைய நாளின் பிற சரியான பதிவுகளிலிருந்து, அன்றைய நாளின் தவறான பதிவுகளிலிருந்து, அல்லது பதிவின் அடுத்தடுத்த நாட்களிலிருந்து சரிசெய்யப்படும், இது முதல் சுற்றுக் காலக்கட்டத்திற்குப் பொருந்தும்.

முதல் சுற்று காலக்கட்டத்திலிருந்து பதிவு செய்தவர்களின் மொத்தம் சுமார் 14,000 செல்லத்தக்க சரியான நுழைவுகள் நிறுவனத்திடம் உள்ள விவரங்களின்படி பதிவுகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட தொலைபேசி எண்ணுக்கு அக்டோபர் 30, 2019 முதல் நவ. 5, 2019-வரை அழைப்பு விடுக்கப்படும்.

வரையறுக்கப்பட்ட காலஅட்டவணையைப் பின்பற்ற முயற்சி எடுக்கப்படும். இருப்பினும், யதார்த்த சூழல்கள், பங்கேற்பு அளவு, தொழில்நுட்பப் பிரச்சனைகள், எதிர்பார்க்காத காரணங்கள் போன்றவற்றின் அடிப்படையில் நேர அளவுகள் மாறுபடலாம். நாட்களையும் நேரத்தையும் தன்னுடைய சொந்த முடிவின்படி மாற்றுவதற்கான உரிமை காட்சி மேலாண்மைக்கு உண்டு என்பது வெளிப்படையாகத் தெரிவிக்கப்படுகிறது.

கீழக்காண்பவை உட்பட்ட காரணங்களினால் (இவை மட்டுமல்ல) கால்-பேக் வெற்றி பெறாவிட்டால், சேனல் மற்றும் நிறுவனம் பொறுப்பாகாது:

a) தொலைபேசி பிஸியாக இருப்பது
b) நெட்வொர்க் நெரிசல்
c) எந்தப் பதிலும் பெறப்படாதிருப்பது
d) மோசமான அழைப்பு நிலைகள் / தெளிவின்றிக் கேட்பது
e) எண் என்கேஜ்டாக இருப்பது
f) அழைப்பு துண்டிக்கப்படுவது
g) ஒரு அழைப்பை தோல்வியடையச் செய்யும் அல்லது அதைத் துண்டிக்கச் செய்யும் பிற காரணங்கள்.

பதிவு செய்தவருக்கு அத்தகைய கால்-பேக் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம் அல்லது கிடைக்காத காரணத்தினால் அடுத்த சுற்றில் பங்கேற்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட முடியாவிட்டால், நிறுவனம் பொறுப்பாகாது.

தேர்ந்தெடுக்கப்பட்ட பதிவு செய்தவர்கள் அழைப்பு மைய அதிகாரியிடமிருந்து ("CCE") அழைப்பைப் பெறுவார்கள். அழைப்பு மைய அதிகாரிகள் ("CCE") கேட்கும் விவரங்களை தேர்ந்தெடுக்கப்பட்ட பதிவு செய்தவர் உடனடியாக உறுதி செய்ய வேண்டும். போட்டியில் பங்கேற்பதற்காக பதிவு செய்தவர் பதிவை அனுப்பினாரா என்பதை உறுதிசெய்ய CCE சில கேள்விகளைக் கேட்பார். தேவைப்படும் விவரங்கள் உடனடியாக அளிக்கப்படாவிட்டால், அல்லது பதிவு செய்ததை உறுதிப்படுத்த இயலாவிட்டால், அந்த முதல் தொலைபேசி

அழைப்பு தொடங்கி சுமார் 30 நிமிடங்களில் CCE மீண்டும் அழைத்து, அதே விவரங்களைக் கேட்பார். அத்தகைய விவரங்களை அளிக்கத் தவறினால், தேர்ந்தெடுப்பு நடைமுறையிலிருந்து அவர் தகுதிநீக்கப்படுவார்.

பதிவு செய்யப்பட்ட தொலைபேசி எண்ணில் பதிலளித்து, அவர்தான் பதிவு செய்தவர் என்பதை உறுதிப்படுத்தினால், வேறு வகையில் தெரிவிக்காதிருந்தாலன்றி, போட்டியின் விதிகளின்படி அவர் பதிவு செய்தவராகக் கருதப்படுவார். ஒரு குறிப்பிட்ட எண்ணிலிருந்து ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் பங்கேற்றால் பதிவு செய்த சரியான நபரைத் தீர்மானிப்பது நிறுவனத்தின் பொறுப்பல்ல.

நிறுவனம் மற்றும் / அல்லது அதன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள், துணையாளர்கள், மற்றும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பதிவு செய்தவர்களைத் தொடர்புகொள்ள தங்களால் முடிந்த நியாயமான முயற்சிகளை எடுப்பார்கள். முதலில் தொடர்புகொண்டதிலிருந்து அடுத்த முப்பது நிமிடங்களுக்குள் தொலைபேசி மூலம் தொடர்புகொள்ள முடியாவிட்டால் அவர்கள் எந்த வகையிலும் பொறுப்பாக மாட்டார்கள்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பதிவு செய்தவர்களைத் தொடர்பு கொண்டதும் CCE-யினால் கீழ்க்காணும் நடைமுறை பின்பற்றப்படும்:

அழைப்பைப் பெற்றவர் CCE-யிடம் உடனடியாக அவர்தான் பதிவு செய்தவர் என்பதை உறுதிப்படுத்தினால், CCE அவரிடம் தன்னுடைய பெயரைக் கூறும்படி கேட்பார்.

பின்னர், ஆடிஷன் நாட்களில் மற்றும் படப்பிடிப்பு நாட்களிலும் பதிவு செய்தவர் வர முடியுமா என்பதைச் சரிபார்த்து CCE உறுதிப்படுத்துவார். குறிப்பிட்ட நாட்களில் பதிவு செய்தவர் வர முடியும் என்றால், பதிவைத் தொடர, CCE அவருடைய முகவரியையும் பிற தேவையான விவரங்களையும் பெற்றுக்கொள்வார். அந்த நாட்களில் பதிவு செய்தவரால் வர இயலாதிருந்தால், பதிவு நடைமுறையைத் தொடர பதிவு செய்தவர் அனுமதிக்கப்பட மாட்டார். தொடர்ந்து பங்கேற்பதிலிருந்து தகுதி நீக்கப்பட்டவராகக் கருதப்படுவார்.

CCE will thereafter inform the Registrant about the transfer to the automated IVR* mode. அடுத்ததாக, பதிவு செய்தவரிடம் இரு "திறன் அடிப்படையிலான" கேள்விகளுக்கு ஒவ்வொன்றாகப் பதிலளிக்கும்படி IVR கேட்கும், ஒரு கேள்விக்கு ஒரளவு சரியான பதிலை அளிக்கும்படி கேட்கும்.** (அதாவது, பதிவு செய்தவால் அளிக்கப்படும் பதில் சரியான பதிலுக்கு நெருக்கமானதாக இருக்க வேண்டும்)

மேற்கண்ட கேள்விகளுக்கு பதிவு செய்தவர் IVR அளிக்கும் தெரிவுகளில் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து சரியான வடிவில் கொடுத்தால், அந்த பதிவு செய்தவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அடுத்த சில நாட்களுக்குள் கூடுதல் பங்கேற்புக்கான ஒரு அழைப்பைப் பெறுவார்.

*IVR-னால் ஒரு பதிலை அளிக்கும்படி கேட்கப்படும் எல்லாக் கேள்விகளுக்கும், 6 நொடிகளுக்குள் பதில் கிடைக்காவிட்டால், IVR அந்தக் கேள்வியை மீண்டும் கேட்கிறது. இரண்டாவது முறையும் பதில் கிடைக்காவிட்டால், IVR அடுத்த கேள்வியைக் கேட்கிறது. தவறான பதில் கொடுக்கப்பட்டால், IVR மற்றொரு வாய்ப்பை அளிக்கிறது. பின்னர் அடுத்த கேள்விக்குச் செல்கிறது. மேலும், ஒவ்வொரு முறையும் பதிவு செய்பவர் ஒரு பதிலை உள்ளிடும்போதும், அவருடைய பதில் மீண்டும் கூறப்பட்டு, அதை உறுதி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுவார்.

**"ஓரளவு சரியான பதில்" கேள்வி என்பது ஒரு திறப்பு நிலைக் கேள்வியாகும் (உ.ம் மும்பைக்கும் ஆக்ராவுக்கும் இடையில் உள்ள தூரம் என்ன) இதற்கு, பதிவு செய்பவர் ஒரு பதில் எண்ணை உள்ளிட வேண்டும். அதன் பிறகு நட்சத்திர / ஹேஷ் கீ-யை அழுத்த வேண்டும்.

<u>லெவல் 3</u>

முதல் சுற்றுக் காலக்கட்டத்திற்கு லெவல் 1 மற்றும் லெவல் 2-ஐ வெற்றிகரமாக முடித்ததும், எல்லா தேர்ந்தெடுக்கப்பட்ட பதிவு செய்தவர்களும் முன்னரே தீர்மானிக்கப்பட்ட ஒதுக்கீட்டு வரைகூறின்படி சமவாய்ப்பாக்கல் மென்பொருளினால் மதிப்பீடு செய்யப்பட்டு தெரிவு செய்யப்படுவார்கள். தோராயமாக 1,500 பதிவு செய்தவர்கள்

ஆடிஷனீகளாக ஆடிஷன் நடக்கும் இடத்திற்கு வரத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

தேவைக்கும் குறைவான பதிவு செய்தவர்கள் இருந்தால், சரியான பதிலளித்த தேவைப்படும் எண்ணிக்கைக்கும் குறைவான பதிவு செய்தவர்கள் சமவாய்ப்பாக்கல் மென்பொருளினால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இதில் சமநிலை ஏற்பட்டால், சரியான பதிவுகளைத் தேர்ந்தெடுக்க “ஓரளவு சரியான பதில்கள்” பயன்படுத்தப்படும்.

ஆடிஷனீகளாக ஆடிஷன் நடக்கும் இடத்திற்கு (முதல் சுற்றுக் காலக்கட்டத்திற்கு) வரத் பதிவுசெய்தவர்கள் சமவாய்ப்பாக்கல் மென்பொருளினால் தேர்ந்தெடுக்கப்படுவர். நியாயமான முயற்சி அடிப்படையில் முன்னரே வரையறுக்கப்பட்ட வரைகூற்றை இதற்காகப் பயன்படுத்தும்.

| **லெவல் 2** | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **லெவல் 2 நடைமுறைக்கான கட்டம் (விழுக்காட்டில்)** | | | **பெண்கள் மட்டும்** | | | |
| | | | **100.00%** | | | |
| | | | **18-24** | **25-34** | **35-44** | **45+** |
| | | | **25%** | **30%** | **25%** | **20%** |
| **மண்டலம் 1** | **சென்னை** | **20%** | 5.0% | 6.0% | 5.0% | 4.0% |
| **மண்டலம் 2.1** | **கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம்** | **10%** | 2.5% | 3.0% | 2.5% | 2.0% |
| **மண்டலம் 2.2** | **<75 லட்சம் நகரங்கள்** | **35%** | 8.75% | 10.5% | 8.75% | 7.0% |
| **மண்டலம் 2.3** | **இந்தியாவின் பிற பகுதிகள்.** | **35%** | 8.75% | 10.5% | 8.75% | 7.0% |
| **மொத்தம்** | | | **100%** | | | |

ஒதுக்கீட்டு அட்டவணையில் குறிப்பிட்ட கட்டத்தில் தேவைக்கும் குறைவான பதிவு செய்தவர்கள் இருந்தால், எஞ்சிய பதிவு செய்தவர்களிலிருந்து சமவாய்ப்பாக்கல் மென்பொருளினால் தேர்ந்தெடுக்கப்பட்டு நிரப்பப்படுவார்கள்.

CCE-யினால் அப்படி ஆடஷனுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குத் தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டு மேலும் தொடருவதற்கு முன்னர் அவர்களுடைய விவரங்கள் (வயது & முகவரி) உறுதி செய்யப்படும். இந்த அழைப்பின்போது தேர்ந்தெடுக்கப்பட்ட பதிவு செய்தவர்களால் அளிக்கப்படும் விவரங்கள் அவர்களால் அளிக்கப்பட்ட ஏற்கனவே உள்ள விவரங்களுடன் ஒத்துப் போகாவிட்டால், அத்தகைய தேர்ந்தெடுக்கப்பட்ட பதிவு செய்தவர்களுக்கு ஒரே ஒரு கூடுதல் வாய்ப்பு மட்டுமே அளிக்கப்படும். அதன் பின்னர் அழைப்பு துண்டிக்கப்படும்.

ஆடிஷன் நாள் மற்றும் இடம் பற்றி பதிவு செய்தவர்களுக்கு தெரிவித்து அந்த ஆடிஷன் நாட்களில் மற்றும் படப்பிடிப்பு நாட்களிலும் பதிவு செய்தவர் வர முடியுமா என்பதை CCE உறுதிப்படுத்துவார். அந்த நாட்களில் பதிவு செய்தவரால் வர இயலாதிருந்தால், பதிவு நடைமுறையைத் தொடர பதிவு செய்தவர் அனுமதிக்கப்பட மாட்டார். ஒருவேளை பதிவு செய்தவர் அந்த நாளில் வரத் தயாராக இருந்தால், கீழ்க்காணும் அவணங்களை பதிவு செய்தவர் எடுத்துவரும்படி CCE கேட்டுக்கொள்வார்:

1) பதிவு செய்தவரின் சமீபத்திய பாஸ்போர்ட் அளவு வண்ணப் புகைப்படம் 4

2) செல்லத்தக்க பெயர் / அடையாளச் சான்றுக்கு (கீழ்க்காண்பனவற்றுள் ஏதாவதொன்று):

1. பிறப்புச் சான்றுடன் PAN அட்டை
2. பாஸ்போர்ட்
3. வாக்காளர் ஐடி
4. ஓட்டுனர் உரிமம் அல்லது

5. UID / ஆதார் அட்டை

3) செல்லத்தக்க முகவரிச் சான்றுக்கு (கீழ்க்காண்பனவற்றுள் ஏதாவதொன்று):

1. தொ.பேசி பில் / மின்சார பில்
2. பாஸ்போர்ட்
3. வாக்காளர் ஐடி
4. ஓட்டுனர் உரிமம்
5. குடும்ப அட்டை அல்லது
6. UID / ஆதார் அட்டை

4) நான்கு போன்-எ-ஃபிரண்டு / வீடியோ-கால் கேன்டிடேட்(ஸ்) ஒவ்வொருவருடைய சமீபத்திய பாஸ்போர்ட் அளவு வண்ணப் புகைப்படம் 2 போன்-எ-ஃபிரண்டு / வீடியோ-கால் கேன்டிடேட்(ஸ்) 18 வயது நிறைவடைந்தவராகவும், இந்தியாவில் உள்ள இந்திய நாட்டவராக இருக்க வேண்டும்.

ஆடிஷனீ ஒவ்வொரு ஆவணத்தின் அசல் ஆவணத்தையும் 2 சான்றொப்பம் இட்ட நகல்களையும் வைத்திருக்க வேண்டும். மேற்கண்ட எல்லா ஆவணங்களும் தமிழ் / இந்தி அல்லது ஆங்கிலத்தில் மட்டுமே இருக்க வேண்டும்.

(போன்-எ-ஃபிரண்டு / வீடியோ-கால் கேன்டிடேட்(ஸ்)-ன் மேற்சொன்ன ஆவணங்களை / புகைப்படங்களைச் சமர்ப்பிப்பது என்பது அந்த ஆடிஷனீ கூடுதல் பங்கேற்புக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதைக் குறிப்பிடாது.)

குறிப்பு : ஆடிஷனீயின் பங்கேற்பு தொடர்பாக ஏற்படும் பயணம், தங்குவது மற்றும் பிற அனைத்துச் செலவுகளும் ஆடிஷனீயின் பொறுப்பே. மேற்கண்ட ஆவணங்களையும் புகைப்படங்களையும் சமர்ப்பித்த பின்னரே ஆடிஷனீ ஆடிஷன் இடத்திற்குள் அனுமதிக்கப்படுவார்.

பின்னர், கொடுக்கப்பட்ட ஆடிஷன் நாட்களில் ஆடிஷன் இடத்தில் மற்றும் படப்பிடிப்பு நாட்களிலும் பதிவு செய்தவர் வர முடியுமா

என்பதைச் சரிபார்த்து CCE உறுதிப்படுத்துவார். அத்தகைய விஷயங்களை உறுதிப்படுத்தய பின்னரே ஆடிஷனில் பதிவு செய்தவர் பங்கேற்கலாமா என்பது பரிசீலிக்கப்படும்.

பதிவு செயல்முறையின்போது தொலைபேசி கஷ்டங்கள், சிஸ்டங்களின் டவுன்டைம், தரவு பேக்கப், தொலைபேசி அமைப்புத் திறன் மற்றும் பிற தொழில்நுட்ப தடைகளுக்கு நிறுவனத்தை பொறுப்பாக்க இயலாது.

உறுதிப்படுத்தும் செய்தி / அழைப்பு கிடைக்காத காரணத்தினால் ஆடிஷனில் எந்த ஒரு ஆடிஷனீயும்(களும்) பங்கேற்க இயலாவிட்டால், அதற்கு எந்த வகையிலும் நிறுவனத்தை பொறுப்பாக்க மற்றும் / அல்லது கடப்பாடுடையதாக்க இயலாது.

<u>லெவல் 4</u>

முதல் சுற்றுக் காலக்கட்டத்திற்கான ஆடிஷன்ஸ் நவ. 7, 2019 முதல் நவ. 20, 2019-வரை ("முதல் ஆடிஷன் காலக்கட்டம்") நடைபெறும். ஆடிஷனீகளுக்கான பதிவு நேரம் தெரிவிக்கப்படும். ஆடிஷனீயின் தேவைக்கேற்க அது மாற்றப்பட மாட்டாது.

தேவைப்படும் ஆவணங்களுடனும் புகைப்படங்களுடனும் ஒவ்வொரு ஆடிஷனீக்கும் ஒதுக்கப்பட்ட நாளிலும் நேரத்திலும் ஒதுக்கப்பட்ட ஆடிஷன் நடக்கும் இடத்திற்கு ஆடிஷனீ வரவேண்டும்.

ஆடிஷன் இடத்தில் உள்ள வாயில் காலை 9 மணிக்கு அல்லது தன்னுடைய சொந்த விருப்பப்படி நிறுவனம் முடிவெடுக்கும் நேரத்தில் மூடப்படும். தாமதமாக வருபவர்கள், நிறுவனத்தின் முடிவின்படி ஆடிஷன் நடைமுறையிலிருந்து தகுதிநீக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். ஒவ்வொரு ஆடிஷனீக்கும் ஒரு தனித்த பதிவு எண் கொடுக்கப்படும். ஆடிஷனில் இருக்கும்போது எல்லா நேரத்திலும் அதை அவர்கள் தாங்கியிருக்க வேண்டும். ஆடிஷனில் பங்கேற்பதற்கு, ரிலீஸ் படிவம், NDA மற்றும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஆகியவற்றுடன் பதிவுப் படிவத்திலும் ஆடிஷனீ கையொப்பமிட வேண்டும். தங்களுடைய சொந்த முடிவின்படி பதிவை / தகுதியை

நிராகரிக்க நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிக்கு இறுதி உரிமை உள்ளது.

நிறுவனத்தினால் கொடுக்கப்பட்டுள்ள முறைப்படியான விஷயங்களைப் பூர்த்தி செய்வதைப் பொருத்து, ஆடிஷனீகள் நுழைவுத் தேர்வுக்கு உட்பட வேண்டும். இதில் எழுத்துத் தேர்வு மற்றும் வீடியோ ஆடிஷன் என்ற இரு சுற்றுகள் உண்டு. ஆடிஷனீகள் எழுத்துத் தேர்வு மற்றும் வீடியோ ஆடிஷன் இரண்டையும் நிறைவு செய்யத் தவறினால், தொடர்ந்து பங்கேற்பதிலிருந்து தகுதி நீக்கப்படுவார்.

(i) எழுத்துத் தேர்வு

- நுழைவுத் தேர்வுக்கு ஆடிஷனீகள் ஒரு அரங்கில் அமர வைக்கப்படுவார்கள்
- அறைக்கான கதவுகள் காலை 9 மணிக்கு அல்லது தன்னுடைய சொந்த விருப்பப்படி நிறுவனம் முடிவெடுக்கும் நேரத்தில் மூடப்படும். அத்தகைய நேரத்திற்குப் பின்னர் வந்து சேரும் ஆடிஷனீகள் ஆடிஷனில் பங்கேற்கத் தகுதி பெறமாட்டார்கள்.
- ஆடிஷனீகளுக்கு ஒரு கேள்வித்தாளும் ஒரு விடைத்தாளும் கொடுக்கப்படும். தங்களுடைய விடைத்தாளில் தங்களுடைய பதில் தெரிவுகளை (A / B / C / D) நிரப்ப ஒரு குறிப்பிட்ட அளவு நேரம் ஆடிஷனீகளுக்குக் கொடுக்கப்படும்
- ஒருவேளை விடைத்தாள் தொலைந்து விட்டால், வாசிக்க முடியாததாக இருந்தால், முழுமையற்றதாக அல்லது கண்டறிய முடியாததாக இருந்தால் அதாவது, ஆடிஷனீயின் பெயர் / எண் குறிப்பிடப்படாதிருந்தால், அத்தகைய ஆடிஷனீ தகுதிநீக்கப்படலாம்

(ii) வீடியோ ஆடிஷன்

- ஒவ்வொரு ஆடிஷனீயும் தனிமனித நேர்முகத் தேர்வுக்கு உட்பட வேண்டும்.
- நிறுவனத்தினர் / தயாரிப்பாளர் எதிர்காலத்தில் பார்ப்பதற்காக வீடியோ ஆடிஷன்கள் பதிவு செய்யப்படலாம்.
- பதிவுகள் ஏதாவது எதிர்பாராத விதத்தில் காணாமல் போய்விட்டால், உற்பத்தியாளர்கள் தங்களுடைய சொந்த

முடிவின்படி ஆடிஷன் அமர்வை மீண்டும் நடத்துவதற்காக அதற்கு வரும்படி ஆடிஷனீகள் கேட்டுக்கொள்ளலாம்.

- எந்த ஒரு ஆடிஷன் மையத்திலும் ஆடிஷனீகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் / குறைக்கும் / மாற்றும் உரிமை தயாரிப்பாளருக்கம் நிறுவனத்திற்கும் உள்ளது.

எல்லா ஆடிஷனீகளும் ஆடிஷன் இடத்தின் சீரொழுங்கைப் பராமரிக்க வேண்டும். அங்குள்ள விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின்படி நடந்துகொள்ள வேண்டும். மேலும், நிறுவனத்தின் / தயாரிப்பாளரின் அறிவுறுத்தல்களை கடுமையாகப் பின்பற்ற வேண்டும். நிறுவனத்தின் அல்லது உற்பத்தியாளரின் அறிவுறுத்தல்களுக்கு எதிராக நடந்துகொள்ளும், அல்லது நிறுவனத்துக்கு, அல்லது பிற எந்த ஒரு நபருக்கும் தொந்தரவை அளிக்கும் எந்த ஒரு ஆடிஷனீயும் ஆடிஷனிலும் போட்டியிலும் பங்கேற்பதிலிருந்து உடனடியாக தகுதிநீக்கம் செய்யப்படுவார், உடனடியாக ஆடிஷன் இடத்திலிருந்து வெளியேறும்படி கேட்டுக்கொள்ளப்படுவார். பிறரை ஆடிஷனீ தவறாக வழிநடத்தினால் மற்றும் ஆடிஷன் செயல்முறை பற்றி தவறான செய்தியைப் பரப்பினால், அந்த நபரை தகுதிநீக்கம் செய்யவும், அத்தகைய ஆடிஷனீமீது சட்ட நடவடிக்கை எடுக்கவும் நிறுவனத்துக்கு உரிமை உள்ளது. ஆடிஷனீகளைத் தெரிவு செய்வது உட்பட (இது மட்டுமல்ல) ஆடிஷன் சம்பந்தமான நிறுவனத்தின் முடிவே இறுதியானதும், கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும். அதை எதிர்க்க இயலாது. ஆடிஷன் பற்றி ஏதாவது தகராறு அல்லது வேறுபாடு இருந்தால், நிறுவனத்தின் முடிவே இறுதியாகும், அனைவரையும் கட்டுப்படுத்தும். தங்களுடைய சொந்த முடிவின்படி பதிவை / தகுதியை மறுக்கும் உரிமை காட்சி மேலாண்மைக்கு உள்ளது.

ஆடிஷனீகளைத் தெரிவு செய்வது உட்பட (இது மட்டுமல்ல) ஆடிஷன் சம்பந்தமான நிறுவனத்தின் / தயாரிப்பாளர்களின் முடிவே இறுதியானதும், கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும். அதை எதிர்க்க இயலாது. ஆடிஷன் பற்றி ஏதாவது தகராறு அல்லது வேறுபாடு இருந்தால், நிறுவனத்தின் முடிவே இறுதியாகும், அனைவரையும் கட்டுப்படுத்தும்.

லெவல் 5

- இரு உறுப்பினர் நடுவர்குழு அதாவது உற்பத்தியாளர் மற்றும் நிறுவனத்தின் ஒவ்வொரு பிரதிநிதிகளினால் விடைத்தாள்களின் அடிப்படையிலும், வீடியோ ஆடிஷன் சமயத்தில் பதிவிடப்பட்ட வீடியோக்களின் அடிப்படையிலும் எல்லா ஆடிஷனீகளையும் மதிப்பீடு செய்வார்கள். மதிப்பீட்டுச் சுற்றில் தெரிவுசெய்யப்பட்ட ஆடிஷனீகள் 2-வது மதிப்பீட்டு நடுவர்களால் மதிப்பீடு செய்யப்படுவார்கள்.

- இரண்டாவது மதிப்பீடு ஒரு மூன்று உறுப்பினர் நடுவர்குழு அதாவது தயாரிப்பாளர் மற்றும் நிறுவனத்தின் ஒவ்வொரு பிரதிநிதிகள் மற்றும் ஒரு தனித்த உறுப்பினர் ("நடுவர்கள்") ஆகியோரால் மதிப்பீடு செய்யப்படும். நடுவர்கள் விடைத்தாள்களின் அடிப்படையிலும், வீடியோ ஆடிஷன் சமயத்தில் பதிவிடப்பட்ட வீடியோக்களின் அடிப்படையிலும் எல்லா ஆடிஷனீகளையும் மதிப்பீடு செய்வார்கள். ஃபாஸ்டஸ்ட் ஃபிங்கர் ஃபர்ஸ்ட் சுற்றுக்கு பங்கேற்பாளர்கள் அடங்கிய இரு பட்டியல் தேர்ந்தெடுக்கப்படும். அவற்றில் பங்கேற்பாளர்களின் ஒரு பட்டியல் பதிலீட்டு நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும்.

- மேலும், சென்னையிலிருந்து 10 ஆடிஷனீகள் (மீண்டும் செயல்திறன் மதிப்பீட்டின் இறங்கு வரிசையில்) "ஸ்டாண்ட்-பைஸ்"-ஆக தெரிவு செய்யப்படுவார்கள்.

- ஃபாஸ்டஸ்ட் ஃபிங்கர் ஃபர்ஸ்ட் சுற்றுக்காக ஒவ்வொரு வாரமும் தேர்ந்தெடுக்கப்படவுள்ள பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:
    - நிகழ்ச்சியின் ஐந்து எபிசோடுகளுக்கு 12 பங்கேற்பாளர்கள் அடங்கிய குழு தேர்ந்தெடுக்கப்படும்

மேலும், சிறப்பு / செலபிரிட்டி எபிசோடுகள் / வாரங்களும் இருக்கும். இதற்கான போட்டியாளர்களைத் தெரிவு செய்வது மாற்று பதிவு / காஸ்டிங் பை புரடக்ஷன் ஹவுஸ் / சேனல் வழியாக செய்யப்படும்.

நிறுவனத்தின் தேவை மற்றும் புத்தாக்க முடிவின் அடிப்படையில், எந்த ஒரு எபிசோடு / வாரத்திற்கும் உரிய ஃபாஸ்டஸ்ட் ஃபிங்கர் ஃபர்ஸ்ட்டுக்கான இறுதிப் போட்டியாளர்கள் தெரிவு செய்யப்பட்ட ஆடிஷனீகளின் மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

1. ஃபாஸ்டஸ்ட் ஃபிங்கர் ஃபர்ஸ்ட் சுற்றுக்கு பங்கேற்பாளர்(கள்) தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது பற்றி தயாரிப்பாளரின் பிரதிநிதிகள் ("பிரதிநிதிகள்") அவர்களுடைய விவரங்களை (பெயர், பாலினம், பிறந்த நாள் மற்றும் முகவரி) உறுதிப்படுத்துவார்கள். அதன் பிறகு, தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கேற்பாளரிடம்(களிடம்) இறுதி செய்யப்பட்ட படப்பிடிப்பு கால அட்டவணையின் அடிப்படையில் படப்பிடிப்பு நாள் பற்றியும், தேவைப்படும் ஆவணங்கள் பற்றியும் தெரிவிப்பார்கள். ஒவ்வொரு பங்கேற்பாளரும் ஒரு செல்லத்தக்க ஆங்கில/தமிழ்/இந்தியில் உள்ள அடையாளச் சான்றையும் 3 பாஸ்போர்ட் அளவுள்ள வண்ண புகைப்படங்களையும் படப்பிடிப்பு ஸ்டுடியோவிற்கு எடுத்து வர வேண்டும். பங்கேற்பாளர் வரத் தவறினால் அல்லது தேவைப்படும் அவணங்களை எடுத்துவரத் தவறினால், தொடர்ந்து பங்கேற்க அனுமதிக்கப்பட மாட்டார்.

2. படப்பிடிப்புக்கு, நிகழ்ச்சியின் புதுமை தேவையின் அடிப்படையில் நிறுவனம் அல்லது தயாரிப்பாளர் தெரிவு செய்யப்பட்ட பங்கேற்பாளரை(களை) குழுவாக்கலாம். அதன் அடிப்படையில் எந்தக் கேள்விகளும் / விசாரணைகளும் அனுமதிக்கப்படாது. எந்த ஒரு நபருக்கும் அல்லது போட்டியாளருக்கும்(களுக்கும்) எந்த ஒரு காரணமும் / நியாயப்படுத்துதலையும் கொடுக்காமல் குழுவை மாற்றும் உரிமை நிறுவனத்துக்கு உள்ளது.

3. ஃபாஸ்டஸ்ட் ஃபிங்கர் ஃபர்ஸ்ட் சுற்றுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆடிஷனீ வருவதை உறுதி செய்ததும், அவர் அந்த சுற்றுக்குத் தகுதி பெறுவார்.

4. எபிசோடின் படப்படிப்புக்கு அவர் வேறு யாரையும் கூட்டிக்கொண்டுவர தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கேற்பாளருக்கு(களுக்கு) அனுமதியில்லை.

5. பங்கேற்பாளர்(கள்) தங்களுடைய சொந்த செலவில் ஆடிஷனுக்கு வர வேண்டும்.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கேற்பாளருக்கு(களுக்கு) உரிய பயண (குறைந்தபட்ச வழி) மற்றும் ஹோட்டலில் தங்கும் ஏற்பாட்டுக்கு தயாரிப்பாளரே பொறுப்பு. தயாரிப்பாளரின் முடிவின்படி பயணம் மற்றும் தங்கும் ஏற்பாடுகள் செய்யப்படும். பங்கேற்பாளரிடமிருந்து இது சம்பந்தமான எந்தக் கோரிக்கையும் அனுமதிக்கப்படாது. இருப்பினும், பங்கேற்பாளர்(கள்) ஒருவேளை சென்னையில் வசிப்பவராக இருந்தால், எந்த ஒரு தங்கும் வசதி ஏற்பாட்டுக்கும் நிறுவனம் / தயாரிப்பாளர் பொறுப்பாகமாட்டார்.

7. ஃபாஸ்டஸ்ட் ஃபிங்கர் ஃபர்ஸ்ட் சுற்றுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கேற்பாளர்(கள்) 5 (ஐந்து) எபிசோடுகளில் பங்கேற்கத் தகுதி பெறுவார்கள். இருப்பினும், ஏதும் சிறப்பு எபிசோடுகள் இருந்தால் அல்லது ஒரு குறிப்பிட்ட எபிசோடு ரத்து செய்யப்பட்டால், நிறுவனம் அல்லது தயாரிப்பாளரினால் எடுக்கப்படும் சொந்த முடிவின்படி அத்தனை நாட்கள் பங்கேற்கத் தகுதி பெற மாட்டார்கள்.

## IV. <u>பொதுவான விதிகளும் கட்டுப்பாடுகளும்</u>

1. மேற்சொன்ன எந்த ஒரு முறையிலும் பதிவுகளை அனுப்பி போட்டியில் பங்கேற்பது என்பது இந்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படும்.

2. போட்டியில் வயதுவந்த இந்தியப் பெண்கள் மட்டும் அதாவது அக்டோபர் 27, 2019 அன்றைய நிலவரப்படி 18 வயது நிரம்பிய நல்ல ஆரோக்கியமான நல்ல சிந்தனையுள்ளவர்கள் கலந்துகொள்ளலாம். போட்டியில் பதிவு செய்த போட்டியாளரே கலந்துகொள்ள வேண்டும். அவருடைய பிரதிநிதி(கள்), அவருடைய குடும்ப உறுப்பினர்கூட கலந்துகொள்வது ஏற்கப்படாது.

3. நுழைவு/கள் பரிமாற்றத்தக்கதல்ல.

4. நிறுவனத்தின் மற்றும் உலகம் முழுவதும் உள்ள அதன் துணை அமைப்புகளின் உடனடி குடும்ப உறுப்பினர்கள் உட்பட நிறுவனத்தின் தொழிலாளர்கள், அலுவலர்கள், இயக்குநர்கள், முகவர்கள் மற்றும் ஊக்குவிப்பாளர்கள், ஸ்பான்சர்கள், தயாரிப்பாளர்கள், விளம்பர முகமை, செயல்முறை ஆலோசகர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்கள், ஒப்பந்தத் தொழிலாளர்கள் / பணியாளர்கள், கூட்டாளிகள், அவர்களுடைய துணையாளர்கள், துணை அமைப்புகள், இந்தியாவில் உள்ள குழும நிறுவனங்கள், இந்திய நாட்டவர் அல்லாதவர்கள், அல்லது இந்தியாவிற்கு வெளியில் வாழும் இந்திய நாட்டவர்கள், அல்லது வருமானவரி சட்டம், 1961-ன்படி இந்திய நாட்டவர் என்ற வரையறையின்கீழ் தகுதிபெறாதவர்கள், அல்லது பேச்சுத் தமிழில் புலமையில்லாதவர்கள் போட்டியில் கலந்துகொள்ள தகுதி பெற மாட்டார்கள். தயாரிப்பாளர் / நிறுவனம் கோரும்போது நியாயமான காலக்கட்டத்திற்குள் பெயர், முகவரி மற்றும் சரியான பிறந்த நாளுக்கான சான்று உட்பட தகுதிக்கான சான்றை அல்லது தகுதிக்கான பிரமாணப் பத்திரத்தை அளிக்கத் தவறினால் தகுதிநீக்கப்படலாம். தயாரிப்பாளரிடம் / நிறுவனத்திடம் அல்லது நிறுவனத்தின் எந்த ஒரு துணை-ஒப்பந்ததாரரிடமும் மற்றும் போட்டியின் வெண்டார்களிடம் பேசும்போது போட்டியாளரால் கொடுக்கப்பட்ட / சொன்ன தகவல்களிலும் மற்றும் / அல்லது போட்டியாளரால் கொடுக்கப்பட்ட ஆவணத்தில் உள்ள தகவல்களிலும் முரண்பாடு இருப்பது கண்டறியப்பட்டால் ஒரு போட்டியாளரை தகுதி நீக்கம் செய்யும் உரிமை நிறுவனத்துக்கு உள்ளது.

5. எந்த ஒரு மூன்றாம் தரப்பு / முகமையிடமும் எந்த வித தனித்த ஒப்பந்தங்களின்கீழும் இல்லை என்பதை அல்லது நிறுவனத்துடன் அல்லது அதன் துணை அமைப்புகளுடன் (பொருந்தும் வகையில்) ஒப்பந்தம் செய்து கொள்ள சட்டத்தின்கீழ் தகுதிநீக்கப்படாதிருப்பதை போட்டியாளர்(கள்) தெரிவிக்கிறார்.

6. இந்த விதிகள் & ஒழுங்குமுறைகளின்படி போட்டியில் பங்கேற்பதற்கு முழு சட்ட உரிமை உள்ளது என்பதை போட்டியாளர்(கள்) நிறுவனத்திற்கு உறுதியளித்து, உத்தரவாதம் அளிக்கிறார்(கள்).

7. போட்டிக்கு பதிவு செய்வதன் மூலம், போட்டியாளர்(கள்) மருத்துவ ரீதியாக தகுதியுடையவர் என்றும் தற்போது அல்லது முன்னர் உளவியல் ரீதியான குறையில்லை என்பதையும் உறுதி செய்கிறார்கள். கடந்த காலத்தில் அவர்களுக்கு ஏதும் உளவியல் சிக்கல்கள் இருந்திருந்தால் அல்லது எந்த ஒரு உளவியல், பதற்றம், அதிக இரத்தஅழுத்தம், மனச்சோர்வு அல்லது பிற எந்த மருத்துவப் பிரச்சனையும் இருந்து அதற்காக மருந்து எடுத்துக்கொண்டிருந்தால், அதுபற்றி நிறுவனத்திடம் / தயாரிப்பாளரிடம் எழுத்துப்பூர்வமாகவும், போட்டியில் பங்கேற்பதற்குத் தகுதியானவர் என்பதைத் தெரிவிக்கும் வகையில் ஒரு தகுதிவாய்ந்த மருத்துவரிடமிருந்து பெற்ற சான்றின் நகலையும் சமர்ப்பிக்க வேண்டும்.

8. பங்கேற்பாளர்(கள்) ஏதாவது உடல் நலமின்றி இருந்தால், மருத்துவப் பிரச்சனைகள் இருந்தால் (அதாவது, இதயக் கோளாறுகள், இரத்த அழுத்தக் கோளாறுகள், கருவுற்று பேருகாலம் நெருங்கும் சமயத்தில் இருப்பவர்கள் முதலானவர்கள்) இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க உறுதிப்படுத்தப்பட மாட்டார்கள். பங்கேற்பதற்கு மருத்துவ ரீதியாகத் தகுதி பெற்றவராக(களாக) இருப்பது போட்டியாளரின்(களின்) பொறுப்பு. இருப்பினும், போட்டியின் ஸ்டுடியோ பாகத்தில் அவர்களுடைய பங்கேற்பு சம்பந்தமாக இறுதி முடிவெடுப்பது முற்றிலும் நிறுவனத்திடமே உண்டு.

9. போட்டியாளர் தன் சார்பாகவே பங்கேற்க வேண்டும். வேறு யார் சார்பாகவும் அல்ல

10. எந்த வித குற்ற நடவடிக்கைக்கும் குற்றம் சுமத்தப்படாமல், அல்லது குற்றவாளி எனத் தீர்ப்பிடப்படாத அல்லது வேறுவழியில் ஈடுபடாதவர் மற்றும் / அல்லது நிறுவனத்திடம் எழுத்துப் பூர்வமாகத் தெரிவிக்காத ஒரு விசாரணை அல்லது காவல்துறையின் அல்லது நீதிமன்றத்தின் விசாரணைக்கு உட்படாதவர் என்பதை போட்டியாளர்(கள்) உறுதியளிக்கின்றனர். நிறுவனத்தினால்

கொடுக்கப்பட்ட படப்பிடிப்பு நாட்களில் காவல்துறை அல்லது எந்த ஒரு நீதிமன்றம் உட்பட்ட எந்த இடத்திலும் போட்டியாளர்(கள்) ஆஜர் ஆக வேண்டும் என்பதில்லை என்பதைத் தெரிவிக்கிறார். ஆடிஷனில் அல்லது போட்டியில் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) பங்கேற்பதைத் தடுக்கும் பிற எந்த இயலாமையும் இல்லை என்பதை போட்டியாளர்(கள்) உறுதிப்படுத்துகிறார்(கள்).

11. தங்களுடைய சொந்த சுதந்திர மனநிலையோடு போட்டியில் பங்கேற்க தன்னார்வத்தோடு முடிவெடுத்ததாக போட்டியாளர்(கள்) ஏற்றுக்கொள்கிறார்(கள்), மேலும் போட்டியில் அப்படிக் கலந்து கொள்வதால் ஏற்படும் அபாயம், செலவுகள் & விளைவுகளைத் தாங்கிக்கொள்ளத் தயாராக உள்ளதாக ஏற்றுக்கொள்கிறார்.

12. பங்கேற்பாளர் எந்த ஒரு ஒப்பந்த, வர்த்தக, ஸ்பான்சர்ஷிப் ஒப்பந்தத்திலும் (ஒலிஒளிப் பதிவு, பெர்ஃபார்மிங் மற்றும் / அல்லது வணிக ஒப்பந்தங்கள் உட்பட (இவை மட்டுமல்ல)) அல்லது பிற எந்த ஏற்பாட்டிலும், உதாரணமாக, எந்த ஒரு மேலாண்மை நிறுவனத்திடம் அல்லது ஒரு தனி நபரிடமும் போட்டியாளர் வெளியீட்டுப் படிவம் அல்லது விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை மீறுவதாக உள்ள அல்லது போட்டியில் / நிகழ்ச்சியில் அல்லது ஒளிபரப்பில், விளம்பரம் அல்லது அதற்கான ஸ்பான்சர்ஷிப்பில் போட்டியாளர்(கள்) பங்கேற்பதை பிற வழிகளில் தடுக்கும் தங்களுடைய இசை அல்லது பெர்ஃபார்மிங் திறன்கள் அல்லது அவற்றின் தயாரிப்புகள், அல்லது அவர்களுடைய பெயர், சாயல், தோற்றம் அல்லது வாழ்க்கை வரலாறு சம்பந்தமாக அவர் போட்டியாளரின் மேலாளராக இருப்பதற்கு ஏற்பாடு செய்வது போன்ற எதிலும் ஈடுபடாதிருக்க வேண்டும் என்பதை போட்டிடயலில் பங்கேற்பது மற்றும் நுழைவதற்கான ஒரு நிபந்தனையாகும்.

13. ஒவ்வொரு போட்டியாளரும் எந்த ஒரு டிசைனர் அல்லது விளையாட்டு லோகோவையோ அல்லது வாழும் அல்லது இறந்த ஒரு பிரபலத்தின் பெயரை அல்லது படத்தைக்கொண்ட உடைகளை போட்டியின் ஸ்டுடியோ பாகத்தின்போது அணியக்கூடாது. எந்த ஒரு போட்டி தொலைக்காட்சி சேனலின் பெயரையோ, போட்டியின்

ஸ்பான்சர்களின் போட்டியாளர்களின் பெயரையோ அணியவோ அல்லது குறிப்பிடவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

14. பங்கேற்பதற்கு நுழைவுகள் பெறப்பட்டிருந்தால், நுழைவை அனுப்பும் நபர் அவர் National Do Not Call ரெஜிஸ்ட்ரியில் பதிவு செய்திருந்தாலும் செய்யாதிருந்தாலும் தனக்கு SMS-களை அனுப்ப அல்லது அவரை அழைக்க அனுமதியளித்துள்ளார் என்று எடுத்துக்கொள்ளப்படும்.

15. போட்டியாளரால் ஸ்டுடியோ பாகத்திற்கு வர இயலாவிட்டால் தொடர்ந்து பங்கேற்பதிலிருந்து அவர் தகுதி நீக்கப்படுவார்.

16. பொய்யான பெயர்கள் / அடையாளங்கள், சட்டத்துக்குப் புறம்பான / பொய்யான கைப்பேசி எண்கள், போலியான மின்னஞ்சல் முகவரிகள் மற்றும் / அல்லது ஆன்லைனில் அல்லது ஹார்டு காப்பிகளாக எந்த பிற சட்ட முரணான வழிகளைப் பயன்படுத்துவது, உண்மையை மறைப்பதாகக் கருத்தப்படும். இதன் காணமாக, நிறுவனத்திற்கு எந்த வித எதிர்மறையான விளைவுகளும் ஏற்பட்டால், பதிவு செய்தவர்(கள்) தகுதிநீக்கப்படுவார்கள், நிறுவனம் கருதும் முறையில் அதற்கான தண்டமும் விதிக்கப்படும்.

17. ஏமாற்றுவது, திரித்துக் காட்டுவது, தவறான செய்திகளை அளிப்பது போன்றவற்றில் ஈடுபட்டதாகக் கண்டறியப்படும் பதிவு செய்பவர்(கள்) நடந்து வரும் ஆடிஷன் பதிவு / ஆடிஷனிலிருந்து தகுதிநீக்கப்படுவார். அத்தகைய பதிவு செய்தவர்(கள்)-க்கு எதிராக நிறுவனம் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கலாம்.

<u>தகவல்</u>

18. வயது, முகவரி, பெயர், புகைப்பட அடையாளம் மற்றும் / அல்லது தேசிய இனத்திற்கான சான்றை அளிக்கும் அவசியமான ஆவணங்களை போட்டியாளர் சமர்ப்பிக்க வேண்டும். அதாவது,

கீழ்க்காண்பனவற்றுக்கான ஒரு அசல் மற்றும் இரண்டு சான்றொப்பமிட்ட நகல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் (i) பாஸ்போர்ட் / ஓட்டுநர் உரிமம் அல்லது (ii) பிறப்புச் சான்று மற்றும் குடும்ப அட்டையுடன் PAN அட்டை அல்லது (iii) பிறப்புச் சான்றுடன் வாக்காளர் அடையாள அட்டை அல்லது (iv) ஆதார் அட்டை அல்லது நிறுவனத்தினால் கோரப்படும் அத்தகைய பிற ஆவணங்கள். இந்த ஆவணங்கள் ஆங்கிலம் / இந்தி அல்லது தமிழ் மொழியில் இருக்க வேண்டும்; மேலும், நான்கு போன்-எ-ஃபிரண்டு / வீடியோ-கால் கேன்டிடேட்(ஸ்) ஒவ்வொருவருடைய சமீபத்திய பாஸ்போர்ட் அளவு இரண்டு வண்ணப் புகைப்படங்கள்.

19. பதிவில் கொடுக்கப்பட்ட தகவலில் ஏதும் விளக்கம் தேவைப்பட்டால், நிறுவனம் / தயாரிப்பாளர் தன்னுடைய சொந்த முடிவின்படி பதிவு செய்தவரை(களை) தொடர்பு கொள்ளலாம்.

20. எந்த ஒரு நேரத்திலும் நிறுவனம் அடையாளச் சான்றையும் மற்றும் / அல்லது தகுதிக்கான சான்றையும் கோரலாம். நியாயமான காலக்கட்டத்திற்குள் அத்தகைய சான்றை அளிக்கத் தவறினால், போட்டியிலிருந்து அவர் தகுதிநீக்கம் செய்யப்படலாம்.

21. போட்டியின் எந்த ஒரு சுற்றிலும் போட்டியாளரின் விவரங்களில் ஏதும் ஒத்துப்போகாதது கண்டறியப்பட்டால், அதை போட்டியாளரால் தீர்க்க முடியாதிருந்தால், போட்டியில் தொடர்ந்து பங்கேற்பதிலிருந்து அவர் தகுதிநீக்கம் செய்யப்படுவார்.

22. நிறுவனத்தினால் கோரப்பட்டு நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட எல்லா தனிப்பட்ட விவரங்களும் தகவல்களும் உண்மையாகவும், துல்லியமானதாகவும் எந்த வகையிலும் தவறாக வழிநடத்துவதாக இல்லாமலும் இருக்க வேண்டும். போட்டியாளர் எந்த ஒரு கட்டத்திலாவது பொய்யான, துல்லியமற்ற அல்லது தவறாக வழிநடத்தும் விவரங்களையும் மற்றும் / அல்லது தகவல்களையும் அளித்திருந்தால் அவரை தன்னுடைய சொந்த முடிவின்படி போட்டி அல்லது ஆடிஷனிலிருந்து அந்தப் போட்டியாளரை(களை) தகுதிநீக்கம் செய்யும் உரிமை நிறுவனத்துக்கு உள்ளது.

23. எந்த ஒரு நேரத்திலும், பரிசு கொடுத்த பின்னரும்கூட, போட்டியாளரால்(களால்) சமர்ப்பிக்கப்பட்ட தகவல் தவறானதாக, பொய்யானதாக அல்லது தவறாக வழிநடத்துவதாகக் கண்டறியப்பட்டால், போட்டியாளர்(கள்) நிறுவனத்திடமிருந்து பெற்ற எல்லாத் தொகைகளையும் திருப்பிக்கொடுக்கக் கடமைப்பட்டிருப்பார்கள்.

24. போட்டியாளர்களிடமிருந்து சேகரித்த எல்லாத் தகவல்களையும் இரகசியமாக வைத்துக்கொள்ள நிறுவனம் முயற்சிக்கும். தேர்ந்தெடுக்கப்பட்டால், போட்டியாளர்களை அழைக்கும் நோக்கத்திற்காக அவற்றை தயாரிப்பாளரிடம் பகிர்ந்துகொள்ளலாம். தற்போதைய நிகழ்ச்சிக்காக மட்டுமே தயாரிப்பாளர் அல்லது அவர் சார்பாக ஒருவர் போட்டியாளரைத் தொடர்பு கொள்வதை நிறுவனம் உறுதி செய்யும். நிறுவனம் / தயாரிப்பாளரால் சேகரிக்கப்படும் அத்தகைய எல்லாத் தகவல்களும் போட்டியாளர் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் அழிக்கப்படும். இந்தப் போட்டியின் நோக்கத்திற்காக அன்றி, அப்படி சேகரிக்கப்பட்ட தகவலை நிறுவனம் எந்த ஒரு தரப்புடனும் பகிர்ந்துகொள்ளவோ சேமிக்கவோ செய்யாது. மேற்சொன்ன கூருணர்வுடைய தனிப்பட்ட தகவல்களை அளிப்பதன் மூலம், அப்படிச் சேகரிக்கப்பட்ட தகவல்களை போட்டியின் நோக்கத்திற்காக மூன்றாம் தரப்பிடமும் தயாரிப்பாளரிடமும் பகிர்ந்துகொள்ள நிறுவனத்துக்கு உரிமை உள்ளது என்பதையும், அத்தகைய தனிப்பட்ட தகவல்களைப் பகிர்ந்து கொண்டதற்காக நிறுவனத்துக்கு எதிராக எந்த வழக்கும் தொடர மாட்டேன் என்பதையும் போட்டியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

25. இந்தப் போட்டியில் பங்கேற்பதன் காரணமாக, தங்களுடைய பெயர் மற்றும் புகைப்படங்களை சேனலில் நிகழ்ச்சியை ஒளிபரப்பும்போது காட்டுவதற்கு நிறுவனத்துக்கு தங்களுடைய ஒப்பதலையும் கொடுக்க வேண்டும்.

26. தொலைக்காட்சி போட்டி “கோடீஸ்வரி - 2019”-யில் பங்கேற்கும் உரிமை தவிர்த்து, போட்டியாளர் அல்லது அவருடைய சட்ட வாரிசுக்கு நிறுவனத்துக்கு அல்லது தயாரிப்பாளர்களுக்கு எதிராக

பிற எந்த உரிமையும் இல்லை. தெளிவுக்காக, ஆடிஷன் அல்லது போட்டிக்கான போட்டியாளருக்கு(களுக்கு) எந்த வித தொகையும் செலுத்தப்படாது.

27. காட்சியோடு தொடர்புடைய விதத்தில் கொடுக்கப்பட்ட எல்லாத் தகவல்களும், எந்தவிதமான உத்தரவாதமும் இல்லாமல் "அப்படியே" கொடுக்கப்பட்டுள்ளது. எந்த ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகவும் துல்லியம், நேரம் தவறாமை, முழுமை, அல்லது பொருத்தத்திற்கு உத்தரவாதம் உட்பட (இது மட்டுமல்ல) வெளிப்படையாகவோ, உட்கிடையாகவோ எந்த வகையான சட்டப்படியான உத்தரவாகதங்களையும் ஆடிஷனீக்கு மற்றும் / அல்லது எந்த மூன்றாம் தரப்புக்கும் காட்சி மேலாண்மை கொடுப்பதில்லை மற்றும் உரிமை மறுக்கிறது.

<u>ஊடகத்திடமும் மூன்றாம் தரப்புகளிடமும் பேசுவது</u>

28. போட்டியாளர்கள் மற்றும் / அல்லது அவர்களுடைய நண்பர்கள், உறவினர்கள், நெருக்கமானவர்கள் நிறுவனத்தின் எழுத்துப் பூர்வமான முன் ஒப்புதல் இல்லாமல் பத்திரிக்கையாளர்களிடம் அல்லது பிற எந்த ஊடகத்திடம் அல்லது எந்த ஒரு மூன்றாம் தரப்பிடம் பேசவோ அல்லது ஆடிஷன் பற்றியோ அல்லது போட்டியின் நிகழ்ச்சியின் எந்த ஒரு அம்சம்ப பற்றியோ எந்த ஒரு பேட்டியோ அல்லது கருத்தையோ தெரிவிக்கக்கூடாது அல்லது பிளாகுகள் எழதவோ, சமூக ஊடகங்களில் அல்லது முகநூல் மற்றும் ட்விட்டர் உட்பட்ட (இவை மட்டுமல்ல) எந்த ஒரு தளத்திலோ எந்த ஒரு செய்தியையும் அளிக்கவோ கூடாது. நிறுவனம் / தயாரிப்பாளர் பற்றிய எந்த ஒரு தகவலையும் எந்த ஒரு காரணத்திற்காகவும் போட்டியாளர்(கள்) எந்த ஒரு மூன்றாம் தரப்பிடமும் தெரிவிக்கக்கூடாது. இந்த விதியை மீறினால், போட்டியாளர்(கள்) தொடர்ந்து பங்கேற்பதை உடனடியாகத் தகுதிநீக்கம் செய்யும்.

29. போட்டியாளர்(கள்) எல்லா நேரங்களிலும் தன்னிடம் தெரிவிக்கப்படும் அல்லது அவர் தெரிந்துகொள்ளும், அல்லது போட்டியாளர்(கள்) என்ற முறையில் அறியவரும், அல்லது தெரிவு செய்யப்பட்ட சாத்தியமுள்ள போட்டியாளர் என்ற முறையில் அறிய வரும் தேர்ந்தெடுப்பு முறையைப் பற்றிய விவரங்களையும் ஆடிஷன் உட்பட்ட போட்டி சம்பந்தமான எல்லா விவரங்களையும் இரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

<u>தொலைபேசியியல்</u>

30. போட்டியாளர்(கள்) ஒருவேளை பொதுத் தொலைபேசியை அல்லது தொலைபேசியை அல்லது தன்னுடைய பெயரில் பதிவு செய்யப்படாத சிம் கார்டை பதிவு செய்வதற்காகப் பயன்படுத்தினால், பதிவுசெய்த போட்டியாளரை(களை) தொடர்புகொள்ளும் பொறுப்பு நிறுவனத்துக்கு இல்லை.

31. ஒருவேளை நிறுவனத்தினால் பதிவு செய்த போட்டியாளரை(களை) தொடர்புகொள்ள இயலாதிருந்தால், அந்தப் பதிவு நுழைவு செல்லாததாகக் கருதப்படும்.

32. ஒரு குறிப்பிட்ட தொலைபேசி எண்ணிலிருந்து / கைப்பேசி எண்ணிலிருந்து யார் பதிவு செய்தது என்பதை உறுதியாகத் தீர்மானிக்க இயலாதபட்சத்தில், அந்த பதிவு தகுதிநீக்கப்படும். தங்களுக்கேயுரியதாக உள்ள தொலைபேசி எண்ணை பதிவு செய்பவர்(கள்) பயன்படுத்த கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

33. IVR அல்லது SMS சர்வர் அல்லது சிஸ்டம் எந்த வகையிலும் தோல்வியடைந்தால் அல்லது பங்கேற்பின்போது அழைப்பு துண்டிக்கப்பட்டால் அல்லது பதிவுசெய்தவர்(கள்) பதிவு விவரங்களைச் சமர்ப்பித்தது முழுமையடையாவிட்டால், அதற்கு நிறுவனம் / தயாரிப்பாளர் பொறுப்பாகமாட்டார்.

34. SMS அல்லது IVR வழியாக பதிவைச் சமர்ப்பித்த பின்னர், பதிவு செய்தவர்(கள்) சமர்ப்பித்த எந்த ஒரு விவரத்தையும் / பதிலையும் மாற்ற / திருத்தியமைக்க அனுமதிக்கப்பட மாட்டார்.

35. பதிவுக் கேள்விகளுக்குப் பின்னர் பெறப்பட்ட பதிவுகள் மட்டும் சேனலில் ஒளிபரப்பப்படுவதற்கு செல்லத்தக்கதாகக் கருதப்படும். பங்கேற்பாளர் விதிகள் & ஒழுங்குமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வடிவத்தில் மேலே குறிப்பிட்ட கால வரம்புக்குள்தான் எல்லாப் பதிவுகளும் பெறப்பட வேண்டும்.

36. போட்டியாளர்(கள்) SMS/ IVR வழியாகப் பதிவு செய்ததன் மூலம், அத்தகைய போட்டியாளர்(கள்) இந்தப் போட்டி அல்லது சேனல் சம்பந்தமான எல்லா மற்றும் எந்த ஒரு தகவலையும் விளம்பரச் செய்திகளையும் பெற ஒத்துக்கொண்டதாகக் கருதப்படும்.

37. பங்கேற்பாளரின் கைப்பேசி / தொலைபேசி நிறுவனத்தினால் விதிக்கப்படும் எந்த ஒரு கட்டணத்திற்கும் நிறுவனம் பொறுப்பாகாது. இது சம்பந்தமான எந்த ஒரு கோரிக்கையும், போட்டியாளரினால்(களால்) உரிய கைப்பேசி தொலைத்தொடர்பு நிறுவனத்திடம் எந்த வகையிலும் நிறுவனத்தைத் தொடர்புபடுத்தாமல் நேரடியாக தீர்த்துக்கொள்ள வேண்டும்.

38. தொலைபேசி பிரச்சனைகளை குறைப்பதற்கும், சிஸ்டங்களின் அப்டைமை உறுதிப்படுத்தவும், தரவை பேக்கப் செய்வதையும், தொலைபேசி அமைப்புத் திறனைப் பராமரிக்கவும், பிற தொழில்நுட்பப் பிரச்சனைகளைத் தடுக்கவும் நியாயமான எல்லா முயற்சிகளையும் நிறவனம் எடுக்கும். ஆனால், இவை வெளிப்புற பயன்பாடுகள் / சேவையாளர்கள் என்பதால் இதற்கு எந்த உத்தரவாதத்தையும் அளிக்க இயலாது.

39. பதிவுகளை தாமதமாகப் பெறுவது அல்லது பெறாதிருப்பது அல்லது முழுமையில்லாமல் பெறுவது அல்லது தவறாகப் பெறுவதற்கு நிறுவனமும் அதன் துணை ஒப்பந்ததாரர்களும் பொறுப்பாகாது.

40. தொலைத்தொடர்பில், வசதிகளை அளிப்பரால் அல்லது திறன் கட்டுப்பாடுகளினால் ஏற்பட்ட தோல்வி காரணமாக போட்டியலில் போட்டியாளரால்(களால்) பங்கேற்க இயலாதிருந்தால், அதற்கு நிறுவனம் எந்த வகையிலும் பொறுப்பாகாது.

## ஆடிஷன்ஸ்

41. தேர்ந்தெடுக்கப்படவுள்ள ஆடிஷனீகளின் எண்ணிக்கை நிறுவனம் / தயாரிப்பாளரின் சொந்த முடிவுக்குட்பட்டது.

42. எல்லா இடங்களிலும் பங்கேற்பாளரை(களை) தேவைக்கேற்ப ஆடிஷன்களுக்குப் பின்னர் நிறுவனம் / தயாரிப்பாளர் தேர்ந்தெடுப்பார். போட்டியில் தொடர்ந்து பங்கேற்க ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பங்கேற்பாளர்(கள்) மட்டுமே அதிலிருந்து தெரிவு செய்யப்படுவார்கள்.

43. போட்டியின் எல்லாக் கட்டங்களிலும் போட்டியின் ஆடிஷன் சுற்றுக்கு ஒருமுறை மட்டுமே போட்டியாளர்(கள்) வர முடியும். போட்டியின் நடப்பு சீசனின் FFF சுற்றுக்கு ஒருமுறையாவது வந்த எந்த ஒரு போட்டியாளரும், போட்டியின் நடப்பு சீசனின் அடுத்த எபிசோடில் பங்கேற்கத் தகுதி பெற மாட்டார்.

44. நிறுவனத்தினால் தீர்மானிக்கப்படும் கால அளவிலும் தேவைகளின்படியும் ஆடிஷன்கள் இருக்கும். எல்ல போட்டியாளரும்(களும்) ஆடிஷனில் பங்கேற்க முடியும் என்று எந்த ஒரு போட்டியாளரிடமும்(களிடமும்) நிறுவனம் எந்த உறுதியையும், உத்தரவாதத்தையும் அளிப்பதில்லை.

45. மேற்கண்ட எந்த ஒரு விதியின்படியும் ஆடிஷனில் அல்லது போட்டியில் போட்டியாளர்(கள்) பங்கேற்க நிறுவனத்தினால் அனுமதிக்க இயலாதிருந்தால் அதன் காரணமாக எந்த ஒரு போட்டியாளரும்(களும்) சந்திக்கும் எந்த ஒரு சேதம், இழப்பு, செலவுகள் அல்லது வேறு எந்த துன்பத்திற்கும் நிறுவனம் பொறுப்பாகவோ அல்லது கடப்பாடுடையதாகவோ ஆகாது.

46. ஆடிஷனில் பங்கேற்பதற்கான எல்லாச் செலவுகளையும் ஆடிஷனீயே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

47. குறிப்பிட்ட இடத்திலும், நாளிலும் நேரத்திலும் ஆடிஷனுக்கு வர ஆடிஷனீ தவறினால், தொடர்ந்து பங்கேற்பதிலிருந்து அவர் தகுதி நீக்கப்படுவார்.

48. பல ஆடிஷன் இடங்களில் ஒரு ஆடிஷனீ (ஒரே தொடர்பு எண் அல்லது பல தொடர்பு எண்கள் வழியாக) தெரிவு செய்யப்பட்டால் அவர் பங்கேற்ற முதலாவது ஆடிஷன் மட்டுமே மதிப்பீட்டுக்குக் கருதப்படும்.

49. ஆடிஷன் நாள், நேரம் மற்றும் இடத்தினை மாற்றும்படி ஆடிஷனீ கோரிக்கை விடுப்பதை நிறுவனம் ஆதரிக்காது.

50. ஆடிஷனுக்கு ஒரு நாளுக்கு மேல் ஆகலாம். நிறுவனம் / பிரதிநிதி தெரிவிப்பதுபோன்று ஆடிஷனின் முழுக் கால அளவும் ஆடிஷனீ இருக்க வேண்டும்.

51. இந்த ஒப்பந்தத்தில் உள்ள வேறு எந்த விதியும் எப்படி இருந்தாலும், நிறுவனம் தன்னுடைய சொந்த மற்றும் முழுமையான முடிவின்படி, ஆடிஷனை ரத்து செய்யலாம் அல்லது காலஅட்டவணையை மாற்றியமைக்கலாம், அல்லது கூடுதல் ஆடிஷன்களை பிற நாட்களில் பிற இடங்களில் தான் தீர்மானித்தபடி நடத்தலாம். போட்டியாளர்(கள்) நிறுவனத்தினால் தீர்மானிக்கப்படும் எந்தவித மற்றும் எல்லா அறிவுறுத்தல்களையும், தேவைகளையும், நேர விதிகளையும் கடைபிடித்து கடைபிடிக்க வேண்டும், அத்தகைய கூடுதல் எல்லா ஆடிஷன்களிலும் கலந்துகொள்ள வேண்டும்.

52. முதல் ஆடிஷன்களிலிருந்து வரும் நபர்கள், தேவை எழுந்தால், நிறுவனத்தின் சொந்த முடிவின்படி, இரண்டாவது படப்பிடிப்பு அட்டவணையில் கருதப்படலாம்.

53. ஆடிஷன்களுக்கு, ஆடிஷனீகள் தனியாகவோ அல்லது மற்றொரு ஊடகத்துறையைச் சேராத நபரோடு வரலாம்.ஆனால், எந்த ஒரு சூழலிலும், ஆடிஷனீயைத் தவிர்த்த பிற எந்த நபரும் ஆடிஷன் நடக்கும் இடத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

54. பதிவு செய்தவர் ஊடகத்தில் / போட்டி சேனல் முதலானவற்றில் உள்ள நபராக இருந்தால்  அவருடைய பங்கேற்பை தகுதிநீக்கம் செய்யும் உரிமை நிறுவனத்துக்கு உள்ளது. இது சம்பந்தமான முடிவு இறுதியானது, எல்லா பதிவு செய்தவர்களையும் கட்டுப்படுத்தக்கூடியது.

55. ஆடிஷன் அல்லது படப்பிடிப்பு இடங்களில் ஆடிஷனீ புகைப்படம் எடுப்பதற்கு கேமராவைப் பயன்படுத்துவதற்கு அனுமதியில்லை.

56. ஆடிஷனில் தெரிவு செய்யப்படுவது என்பது போட்டியில் மேலும் பங்கேற்பதற்கான முதல் படி என்பதை போட்டியாளர்(கள்) புரிந்துகொள்கிறார்(கள்). பங்கேற்பதை அனுமதிப்பது என்பது புதுமைத் தேவைகளின் அடிப்படையில் நிறுவனத்தின் / தயாரிப்பாளரின் முழுமையான மற்றும் சொந்த முடிவுக்கு உட்பட்டது.

**ஆடிஷன் சுற்று 1-க்கான நாட்களும் இடம் பற்றிய விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன***

| **ஆடிஷன் நடைபெறும் நகரங்கள்** | **ஆடிஷன் நடைபெறும் நாட்கள்** | **அரங்கத்தின் பெயர்** | **இடத்தின் முகவரி** |
|---|---|---|---|
| திருநெல்வேலி | **10-நவ-2019** | **<<TBI>>** | **<<TBI>>** |
| மதுரை | **12-நவ-2019** | **<<TBI>>** | **<<TBI>>** |
| கோயம்பத்தூர் | **14-நவ-2019** | **<<TBI>>** | **<<TBI>>** |
| சென்னை | **16-நவ-2019** | **<<TBI>>** | **<<TBI>>** |
| புதுச்சேரி | **17-நவ-2019** | **<<TBI>>** | **<<TBI>>** |

* தன்னுடைய சொந்த முடிவின்படி ஆடிஷன் நடைபெறும் நாட்கள் / நகரம் / இடத்தை மாற்றும் உரிமை நிறுவனத்துக்கு உள்ளது.

<u>குறுகிய பட்டியலிடுதல் (தெரிவு செய்தல்)</u>

57. **பதிவு செய்தவரை(களை) தவிர்த்து நிறுவனம், தன்னுடைய சொந்த முடிவின்படி, ஆடிஷனில் / போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பை நிகழ்ச்சித் தேவையின் அடிப்படையில், தேவைப்பட்டால், அல்லது பங்கேற்பு தேர்ந்தெடுப்பு முறையில் அல்லது சிஸ்டத்தில் பிரச்சனை ஏற்பட்டால் பதிவு செய்யாத தனிநபர்களுக்கும் அளிக்கலாம்.**

58. "செலபிரிட்டி ஸ்பெஷல் எபிசோடுகள்" அல்லது "சீசனல் ஸ்பெஷல் எபிசோடுகளை" நடத்த நிறுவனத்துக்கு முழு உரிமை உள்ளது. இங்கு, நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக பிரபலமான நபர்கள் அழைக்கப்படலாம். அவர்கள் தேர்ந்தெடுக்கப்டும் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அவசியமில்லை. "சிறப்பு எபிசோடுகள்"-ல் பங்கேற்கும் போட்டியாளர்கள் நிறுவனத்தால் (நிறுவனத்தின் சொந்த முடிவுப்படி) தேர்ந்தெடுக்கப்படுவர். இவர்கள் வழக்கமான தெரிவு நடைமுறைப்படி அல்லது அப்படியில்லாமல் தேர்ந்தெடுக்கப்படலாம். செலபிரிட்டி ஸ்பெஷல் எபிசோடுகள்" அல்லது "சீசனல் ஸ்பெஷல் எபிசோடுகள்" அல்லது போட்டியாளர்களைக் கொண்டு நடத்தப்படும் "ஸ்பெஷல் எபிசோடுகள்"-ன் எண்ணிக்கை மற்றும் அதற்கான பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை நிறுவனத்தின் சொந்த முடிவுக்கு உட்பட்டது.

59. நிகழ்ச்சிக்கான இறுதி தேர்வுக்குப் பின்னரும்கூட, தன்னுடைய சொந்த முடிவின்படியும், புதுமைத் தேவைக்கேற்பவும், போட்டியை அல்லது நிகழ்ச்சியை சிறப்பாக்குவதற்காக நிறுவனம் / தயாரிப்பாளர் பங்கேற்பாளரை(களை) மாற்றும் உரிமை உள்ளது.

60. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பங்கேற்கும் போட்டியாளர்களின் விகிதத்தை போட்டியாளரிடம்(களிடம்) மற்றும் / அல்லது பொது மக்களிடம் முன்னரே தெரிவிக்காமலும்கூட அதிகரிக்க அல்லது குறைக்கவும் நிறுவனத்துக்கு உரிமை உள்ளது.

61. போட்டியாளர்(கள்) தேர்ந்தெடுக்கப்படுவது ஒரு சமவாய்ப்பாக்கல் மென்பொருளினால் மற்றும் தேர்வு மென்பொருளின் அடிப்படையில் இருக்கும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

62. போட்டியாளர்(கள்) அல்லது அவர்களுடைய பிரதிநிதிகள் சமவாய்ப்பாக்கல் மென்பொருள் அல்லது தேர்வு மென்பொருளின் தத்துவத்தைச் சரிபார்க்கும்படி / தணிக்கை செய்யும்படி / சவால் விடுவதை நிறுவனம் ஏற்காது.

63. ஆடிஷனில் / போட்டியின் ஸ்டுடியா பாகத்தில் பங்கேற்பதிலிருந்து ஒரு போட்டியாளரை தன்னுடைய சொந்த முடிவின்படி நிறுவனம் விலக்கி வைக்கலாம் அதற்கான காரணங்கள் (கட்டுப்பாடு இல்லாமல்) (i) நிறுவனத்தின் பார்வையில், போட்டியாளரைத் தகுதியற்றவராக்கும் சூழல்கள்; (ii) போட்டியாளரின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணச் சான்றுகளைத் அளிக்கத் தவறுவது; (iii) நிறுவனத்தின் பார்வையில் நிறுவனத்தை, சேனலை அல்லது போட்டியைப் பாதிக்கும் பிற எந்த ஒரு காரணமும்.

64. வெற்றிபெறாத போட்டியாளர்களுக்கு தன்னுடைய முடிவைத் தெரிவிக்கும் கடமை எந்த ஒரு நேரத்திலும் நிறுவனத்துக்கு / தயாரிப்பாளருக்கு இல்லை.

65. (i) நிகழ்ச்சியில் போட்டியாளர்(கள்) தொடரச் செய்யவும் (ii) போட்டியின் ஒவ்வொரு உரிய நேரத்திலும் எல்லாப் போட்டியாளரையும்(களையும்) தொடர்புகொள்ளவும் நிறுவனம் எல்லா நியாயமான முயற்சிகளையும் எடுத்தாலும், நிறுவனம் அதற்கு எந்த உத்தரவாதத்தையும் அளிக்காது. போட்டியாளரை(களை) தொடர்புகொள்ள முடியாதபட்சத்தில், இந்த விதிகளின்கீழ் அடுத்த உரிய போட்டியாளரை(களை) தன்னுடைய சொந்த முடிவின்படி நிறுவனம் தேர்ந்தெடுக்கலாம்.

66. எந்த ஒரு காரணத்திற்காகவும் போட்டியில் ஒரு போட்டியாளரால் பங்கேற்க முடியாதிருந்தால் அதற்கு நிறுவனம் பொறுப்பாகாது. போட்டியாளரை(களை) தகுதிநீக்கம் செய்யவும், எந்த ஒரு நேரத்திலும் போட்டியிலிருந்து அத்தகைய போட்டியாளரை(களை)

தன்னுடைய சொந்த முடிவின்படி மாற்றவும் நிறுவனத்துக்கு உரிமை உள்ளது.

67. எந்த ஒரு காரணத்திற்காகவாவது எந்த போட்டியாளரும்(களும்) போட்டியில் மற்றும் / அல்லது நிகழ்ச்சியில் தோல்வியடைந்தால் அல்லது போட்டிக்கு தகுதியற்றவராகினால் அல்லது பங்கேற்க இயலாதிருந்தால் அவரை மற்றொரு போட்டியாளரை(களை) கொண்டு தன்னுடைய சொந்த முடிவின்படி மாற்ற நிறுவனத்துக்கு உரிமை உள்ளது. அத்தகைய உள்வந்த போட்டியாளர் ஏற்கனவே நீக்கப்பட்டவராக இருக்கலாம். நிறுவனத்தினால் கோரப்படும்போது நிகழ்ச்சியில் மற்றும் / அல்லது போட்டியில் பங்கேற்க ஒவ்வொரு போட்டியாளரும் ஒத்துக்கொள்ள வேண்டும்.

68. இரு (அல்லது அதிகமான) போட்டியாளர்(கள்)-கிடையே சமநிலை ஏற்பட்டால், எந்தப் போட்டியாளர்(கள்) நீக்கப்படுவர் என்பதை முடிவுசெய்யும் மற்றும் / அல்லது அடுத்த சுற்றுக்குச் செல்லும் போட்டியாளர்(கள்) யார் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை நிறுவனத்துக்கு உள்ளது. இந்தக் காரணத்திற்காக, தன்னுடைய சொந்த முடிவின்படி அவசியம் எனக் கருதினால் போட்டியாளர்களிடமிருந்து கூடுதல் சுற்றுக்களைக் கோரலாம் அல்லது அத்தகைய ஏற்பாடுகளைச் செய்யலாம். இது சம்பந்தமாக, எந்த ஒரு விசாரணையும், வார்த்தை அல்லது எழுத்துப்பூர்வமான முறையீடுகளும் ஏற்கப்படாது.

69. பதிவு விவரங்கள் தொலையாமல், அழியாமல் பாதுகாக்க எல்லா முயற்சிகளும் எடுக்கப்படும். ஆனால், அப்படி தரவு இழப்பு ஏற்பட்டால், பங்கேற்பாளர் தேர்வு நடைமுறையின் காலக்கெடு காரணமாக, எஞ்சியுள்ள கிடைக்கும் தரவைக்கொண்டு அல்லது அது நியாயமானது எனக் கருதும் எந்த ஒரு முறையிலும் நிறுவனம் தொடரலாம்.

<u>அறிவுசார் சொத்துரிமைகள் மற்றும் தனிப்பட்ட தகவலை அணுகுதல்</u>

70. நிறுவனம் கோரினால், போட்டியாளர்(கள்) தன்னுடைய இருப்பிடம், வேலை செய்யும் இடம், விருப்பமான பொழுதுபோக்கு, செல்லப்

பிராணிகள் முதலானவற்றை அணுக நிறுவனத்துக்கு ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டும். அவருடைய பெற்றோர், சகோதர சகோதரிகள், நண்பர்கள், சகாக்களை புகைப்படம் எடுக்க, பேட்டி காண, அவர்களைப் புகைப்படம் எடுக்க வீடியோ எடுத்துப் பதிவு செய்ய உரிய அனுமதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

71. நிகழ்ச்சி / போட்டியில் பங்கேற்பாளரின்(களின்) பங்களிப்பின் அங்கமாக, நிகழ்ச்சி / போட்டி தொடர்புடைய வெப்-காஸ்ட்ஸ், இன்டர்வியூஸ் மற்றும் “சேட்-ரூம்ஸ்”-ல் கலந்துகொள்வது உட்பட்ட எந்த ஒரு ஆன்லைன் / இன்டராக்டிவ் நிகழ்ச்சியிலும் பங்கேற்கும்படி போட்டியாளரை(களை) தயாரிப்பாளர் கேட்கலாம். எல்லா பங்களிப்பாளர்களிடமிருந்தும் நிறுவனம் / தயாரிப்பாளரால் அவ்வப்போது கொடுக்கப்படும் அவர்களுடைய வெளியீட்டுப் படிவத்தின் ஒப்பந்தத்தை பெறுவதை போட்டியாளர்கள் உறுதி செய்வதும் போட்டியில் பங்கேற்பு மற்றும் நுழைவின் ஒரு கூடுதல் நிபந்தனையாகும்.

72. போட்டியின் வெற்றியாளர்(கள்), அவ்வப்பொது நிறுவனம் கோரும் சமயத்தில் நேரம் ஒதுக்கி ஒத்துழைக்கவும், அவர்களுக்கு எந்த ஊதியமும் கொடுக்காமலேயே எந்த இயல்புடைய எந்த ஒரு செயல்பாட்டிலும் மற்றும் / அல்லது பிரச்சாரத்திலும் (”விளம்பர நடவடிக்கை”) பங்கேற்கவும் சம்மதிக்கிறார்கள். மேலும், வெற்றியாளர்(கள்) / போட்டியாளர்(கள்) எந்த ஒரு சமயத்திலும் எந்த ஒரு காரணத்திற்காகவும் நிறுவனம் கோரினால் அத்தகைய எந்த ஒரு விளம்பர நடவடிக்கையிலும் பங்கேற்க மறுக்கவோ, ஒத்துக்கொள்ளாதிருக்கவோ கூடாது. உலகளாவிய அளவிலும், கால வரம்பு இல்லாமலும் எல்லா அறிவுசார் சொத்துரிமைகள் மற்றும் பிற எந்த உரிமைகள் உட்பட எந்த ஒரு இயல்புடைய ஃபுட்டேஜும் நிறுவனத்துக்குரியது என்பதை வெற்றியாளர்(கள்) / போட்டியாளர்(கள்) ஏற்கின்றனர்.

73. நிறுவனத்திடம் / தயாரிப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட்ட எந்த ஒரு புகைப்படம், வீடியோ முதலானவை அல்லது ஆடிஷன் அல்லது பதிவு சமயத்தில் தயாரிப்பாளர்களால் பதிவு செய்யப்பட்டவை அவை சமர்ப்பிக்கப்பட்டதிலிருந்து / தயாரிக்கப்பட்டதிலிருந்து

நிறவனத்தின் சொத்தாகும். உலகெங்கும் கால வரம்பின்றி நிறுவனம் பயன்படுத்தலாம். எந்த ஒரு பொதுத் தளத்திலும் அல்லது தங்களுடைய செயல்பாட்டிலும் விகாரமாக, ஆபாசமாக, அவமதிப்பதாக, குழந்தைகள் அல்லது பெண்களைச் சிறுமைப்படுத்துவதாக, மத உணர்வுகளைப் புண்படுத்துவதாக, வன்முறையைக் காட்டுவதாக, ஒரு மூன்றாம் தரப்பின் உரிமைகளை மீறாததாக இருப்பதை போட்டியாளர்(கள்) தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட புகைப்படங்கள் அல்லது வீடியோக்கள் இல்லாமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். மேற்கண்டவற்றில் எந்த ஒரு விதிமீறலும் இருக்குமானால், ஆடிஷன்களில் / போட்டியில் அல்லது எந்த ஒரு கூடுதல் சுற்றிலும் பங்கேற்பதிலிருந்து உடனடியாக தகுதிநீக்கப்படுவார்கள். அதன் காரணமாக எழும் எந்த ஒரு நடவடிக்கைக்கும் (குற்ற / குடிமை) அத்தகைய போட்டியாளர்(கள்) பொறுப்பானவர்களாக இருப்பார்கள்.

74. பங்கேற்பாளர்கள் / போட்டியாளர்களினால் இந்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஏற்கப்படுவது என்பது நிறுவனமும், அதன் துணை அமைப்புகளும் மற்றும் தயாரிப்பாளரும் புகைப்படம் எடுக்க, போட்டியாளரை(களை) வீடியோ பதிவு செய்ய, போட்டியாளரின்(களின்) பெயர், புகைப்படங்கள், சாயலை, குரலை, கருத்துக்களை விளம்பரத்திற்காகவும், விளம்பர நோக்கத்திற்காகவும் எந்த ஒரு ஊடகத்திலும் உலக அளவில் எந்த ஒரு கூடுடதல் இழப்பீடும் அளிக்காமல் பயன்படுத்தவும் அனுமதி அளிப்பதை உள்ளடக்கும்.

75. சமர்ப்பிக்கப்பட்ட தகவலை ஆய்வு செய்ய வேண்டிய கடமை காட்சி மேலாண்மைக்கு இல்லை. அறிவுசார் சொத்துரிமை மீறலைத் தடுக்கவோ, எந்த ஒரு சட்டத்தையோ, விதியையோ அல்லது ஒழுங்குமுறையையோ மீறுவதைத் தடுக்க, சமர்ப்பிக்கப்பட்ட தகவலைக் கண்காணிக்கும் பொறுப்பு அதற்கு இல்லை. இந்த விதிகளுக்கு இசைந்திராத விதத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக அல்லது தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளதாக காட்சி மேலாண்மைக்குத் தெரிவிக்கப்பட்டால், அந்தக் குற்றச்சாட்டை அது விசாரித்து நல்நம்பிக்கையுடன் தீர்மானிக்கலாம். அதனுடைய சொந்த முடிவில் காட்சியிலிருந்து ஆடிஷனீயை நிராகரிப்பதா என முடிவெடுக்கலாம்.

செயலி மற்றும் வலைதளத்தின் செயல்திறனுக்கு அல்லது செயல்திறனின்மைக்கு ஆடிஷனீகள் அல்லது செயலியின் மற்றும் வலைதளத்தின் பிற பயனர்களைப் பொருத்தவரை, காட்சி மேலாண்மைக்கு எந்த கடப்பாடு அல்லது பொறுப்பும் இல்லை.

76. போட்டியில் பங்கேற்பதன்மூலம் ஆடிஷனீகள் பங்கேற்புக்கான அத்தகைய நுழைவைப் பயன்படுத்தவும் காட்டவும் ஒரு பங்குவீத உரிமை இல்லாத, திரும்பப் பெற இயலாது, சர்வதேச, மாற்றத்தக்க, தனி உரிமை அல்லாத மற்றும் உரிமத்தை காட்சி, மற்றும் உள்ளடக்கத்தில் உள்ள மற்றும் காட்சியில் அப்படிப் பங்கேற்பதிலிருந்து எழும் மற்றும் அதனோடு தொடர்புடைய எந்த ஒரு அறிவுசார் சொத்துரிமைகள் மற்றும் தோற்றங்கள் அல்லது அதனுடைய ஃபுட்டேஜ், இதில், வர்த்தக வெளியீடுகள், ஊடக வெளியீடுகள், வலைதளப் பக்கத்திற்கான அல்லது வேறு எந்த வலைதளத்திற்கும் மின்னணு தரவேற்றம், ”வியாகாம் 18” வலைதளம், சேனல் எலக்ட்ரானிக் ஹைப்பர்லிங்குகள் மற்றும் காட்சியின்போது நிறுவனத்தினால் தேர்ந்தெடுக்கப்படும் எந்த ஒரு டிஸ்பிளே ஃபார்மாட், அல்லது சரியானது முடிவெடுத்து நிறுவனத்தினால் பயன்படுத்தப்படுபவை, மற்றும் பரஸ்பரம் அவர்களுக்கிடையே ஒத்துக்கொள்ளப்பட்டவை, எந்த கூடுதல் ஆவணமும் இல்லாமல், அனுமதி அல்லது ஆடிஷனீயின் ஒப்புதலும் இல்லாமல் நிறுவனத்துக்கு, காட்சி மேலாண்மைக்கு தானாக அளிக்கின்றனர். பங்கேற்புக்காக அத்தகைய நுழைவைப் பயன்படுத்த மற்றும் காட்ட நிறுவனத்துக்கும் காட்சி மேலாண்மைக்கும் உரிமை உள்ளது என்றாலும், சந்தேகத்தைத் தவிர்ப்பதற்காக காட்சியையும், உள்ளடக்கத்தில் உள்ள மற்றும் காட்சியில் அப்படிப் பங்கேற்பதிலிருந்து எழும் மற்றும் அதனோடு தொடர்புடைய எந்த ஒரு அறிவுசார் சொத்துரிமைகள் மற்றும் எந்தவித மேம்பாடுகள், குறைநிரப்பு மற்றும் துணை படைப்புகள் நிறுவனம் மற்றும் காட்சி மேலாண்மையின் உடைமையாக எப்போதும் இருக்கும் என்பதை விளக்க விரும்புகிறது.

77. காட்சியில் நுழைவதன் மூலமும் மற்றும் / அல்லது ஒழுங்குமுறைகளை ஏற்பதன் மூலமும், எல்லா

நகலுரிமைகளையும், விளம்பர உரிமைகள் மற்றும் எந்தவித சார்புடைய உரிமைகளையும் விட்டுக்கொடுக்கின்றனர். சட்டத்தினால் தடுக்கப்பட்டவை தவிர்த்து, விளம்பர நோக்கத்திற்காக, எந்தவித இழப்பீடும் இல்லாமல், தொலைக்காட்சி, திரைப்படம், ரேடியோ மற்றும் அச்சு ஊடகம் உட்பட (இவை மட்டுமல்ல) தற்போது இருக்கும் அல்லது இதற்குப் பின் தயாரிக்கப்படும் எந்த ஒரு மற்றும் எல்லா ஊடகத்திலும் இதைக் காட்டவும், படம்பிடிக்க, ஒலிப்பதிவு செய்ய அல்லது காடசி வெற்றியாளராகக் காட் நிறுவனத்துக்கு உரிமை உள்ளது என்பதை ஒத்துக் கொள்கின்றனர். ஆடிஷனீயின் பெயர், குரல் அல்லது படத்தைப் பயன்படுத்த, அல்லது அவருடைய பங்கேற்பின் உள்ளடக்கத்தை அதாவது நிறுவனத்துக்கு விளம்பர உரிமை உள்ளது என்பதையும் வெற்றியாளர் ஏற்றுக் கொள்கிறார். நிறுவனத்தின் இணைப்போடு விளம்பர உரிமையை பயன்படுத்த தன்னுடைய முகமைகளுக்கு நிறுவனம் அனுமதியளிக்கலாம்.

78. தங்களுடைய சொந்த முடிவின்படி ஆடிஷனீகள் போட்டியில் மற்றும் காட்சியில் பங்கேற்க சம்மதிக்கிறார்கள். ஆடிஷனீகளுக்கு ஏற்படும் எந்த வித இழப்பு அல்லது செலவுகளுக்கும் காட்சி மேலாண்மை, நிறுவனம் எந்த வகையிலும் பொறுப்பாகாது அல்லது கடப்பாடுடையதாகாது. காட்சி ஒளிபரப்பைத் தொடர்ந்து போட்டியில் அல்லது காட்சியில் அல்லது நிகழ்ச்சியில் பங்கேற்றதற்காக ஆடிஷனீக்கு எதையும் செலுத்த வேண்டியதில்லை.

<u>கேள்விகளும் பதில்களும்</u>

79. போட்டியின் எந்த ஒரு சுற்றிலும் கேட்கப்படும் எந்த ஒரு கேள்வி மற்றும் பதிலின் அதிகாரப்பூர்வம் அல்லது சரிநிலை சம்பந்தமான எந்த ஒரு கோரிக்கை / கேள்வி / விசாரணையையும் நிறுவனம் அல்லது தயாரிபாளர் ஏற்க மாட்டார்.

80. எந்த ஒரு பதிலின் சரிநிலை அல்லது தவறான நிலை பற்றிய நிறுவனத்தின் முடிவே இறுதியானதும் எல்லாப் போட்டியாளர்களையும் கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும்.

பங்கேற்பு & திட்டச் செயல்பாட்டுக்கான செலவுகள்

81. நிறுவனத்தினால் தெரிவிக்கப்பட்ட ஆடிஷன் நடக்கும் இடத்தில் ஆடிஷனில் பங்கேற்பதற்கான பயணம் மற்றும் தங்கும்வசதி உட்பட (இவை மட்டுமல்ல) எல்லாச் செலவுகளும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆடிஷனீகளால் செய்யப்பட வேண்டும். நிறுவனமோ அல்லது அதன் துணை ஒப்பந்ததாரர்களோ அதற்குப் பொறுப்பாகாது.

82. படப்பிடிப்பில் கலந்து கொள்வதற்காக FFF-காக தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கேற்பாளர்(கள்)-ன் பயண மற்றும் தங்கும் வசதி (சென்னையில் தங்கியிருக்கும் பங்கேற்பாளர்கள் தவிர்த்து) தயாரிப்பாளரால் ஏற்பாடு செய்யப்படும்.

83. போட்டியாளர்(கள்)-காக ஏற்பாடு செய்யப்பட்ட தொடர்வண்டி / விமானங்கள் / கார்கள் எந்த ஒரு காரணத்திற்காகவாவது எதிர்பார்க்காத தடுக்க முடியாத காரணங்கள், விமான நிலையங்கள் / ரயில்வே நிலையங்கள் / சாலை முதலானஎற்றில் உள்ள போக்குவரத்துப் பிரச்சனைகள் உட்பட்ட (இவை மட்டுமல்ல) காரணங்களால் ரத்து செய்யப்பட்டால் மற்றும் / அல்லது தாமதமானால் நிறுவனம் அல்லது போட்டி / நிகழ்ச்சி தொடர்புடைய அதன் துணை அமைப்புகள் பொறுப்பாகாது. அதற்காக நிறுவனம் மற்றும் / அல்லது போட்டியோடு தொடர்புடைய அதன் துணை அமைப்புகளில் ஏதும் மற்றும் / அல்லது தயாரிப்பாளருக்கு எதிராக எந்த விதத்திலும் வழக்கிட முடியாது. அத்தகைய எந்த ஒரு விளைவுக்காகவும் நிறுவனம் மற்றும் / அல்லது போட்டியோடு தொடர்புடைய அதன் துணை அமைப்புகளில் ஏதும் மற்றும் / அல்லது தயாரிப்பாளர்கள் பொறுப்பாக மாட்டார்கள். அதற்காக நிறுவனம் / தயாரிப்பாளரிடமிருந்து இழப்பீட்டைக் கோராதிருக்க போட்டியாளர்(கள்) உறுதியளிக்கின்றனர்.

84. நிகழ்சியில் / போட்டியில் பதிவு செய்வது அல்லது பங்கேற்பதோடு நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்புள்ள விதத்தில் போட்டியாளர்(கள்) அல்லது அவர்களுடைய குடும்பத்தினர் /

சார்புள்ளவர்கள் முதலானோரின் எந்த வித கூடுதல் செலவுகளுக்கும் நிறுவனம் பொறுப்பாகாது.

<u>பரிசு</u>

85. போட்டியில் அதிகபட்சமாக வெல்லும் பரிசுத் தொகை ரூ. 1,00,00,000/- (ரூபாய் ஒரு கோடி மட்டும்).

86. ஒவ்வொரு பங்கேற்பாளரும் அதிகபட்ச பரிசுத் தொகையை வெற்றிபெறுவது என்பது அவசியமல்ல. பங்கேற்பாளருக்கு போட்டியின்கீழ் வழங்கப்படும் எல்லா பணம் செலுத்துதல்களும் TDS-க்கும் அவ்வப்போது நடைமுறையில் இருக்கும் பிற பொருந்தும் வரிகளுக்கும் உட்பட்டது.

87. போட்டியின்போது பங்கேற்பாளர்(கள்) வென்ற தொகையைப் பொருத்து நிறுவனம் பங்கேற்பாளர்(கள்)-இடமிருந்து எல்லா தேவையான ஆவணங்களையும் பெற்ற பின்னரே பங்கேற்பாளருக்கு(களுக்கு) தொகை செலுத்தும். ஒருவேளை அத்தகைய பங்கேற்பாளர்(கள்) அத்தகைய கோரிக்கை விடுத்து 15 நாட்களுக்குள் ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறினால், நிறுவனத்திடமிருந்து பெறக்கூடிய பணத்தை அவர் விட்டுக்கொடுக்க வேண்டும். தேவைப்படும் அவணங்கள் கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து 120 நாட்களுக்குள் பங்கேற்பாளருக்கு(களுக்கு) நிறுவனம் தொகையைச் செலுத்தும்.

88. பங்கேற்பாளர் வெற்றி பெற்றால் கிடைக்கும் பரிசுத் தொகையில் இந்தியச் சட்டத்தின்கீழ் பொருந்தும் எல்லா வரிகளும் மற்றும் / அல்லது தீர்வைகளும் பரிசு தொடர்பாக பங்கேற்பாளரால்(களால்) செலுத்தப்பட வேண்டும். பொருந்தும் எல்லா வரிகளையும் தீர்வைகளையும் கழித்த பின்னர் மற்றும் நிறுவனம் கோரும் உரிய ஆவணங்களை அளிப்பதைப் பொருத்தும் பங்கேற்பாருக்கு(களுக்கு) / வெற்றியாளருக்கு(களுக்கு) அளிககப்பட வேண்டிய பரிசுத் தொகை நிறுவனத்தினால் குறிப்பிடப்பட்ட கால அளவுக்குள் செலுத்தப்படும். பங்கேற்பாளர்(கள்) / வெற்றியாளர்(கள்) பரிசுத் தொகையைப் பெற

உரிய முறையில் சான்றொப்பமிடப்பட்ட PAN அட்டையின் நகல் அவசியம்.

89. இந்த விதிகள் & ஒழுங்குமுறைகளின்கீழ் போட்டியில் பங்கேற்பதில் பங்கேற்பாளரின்(களின்) மோசடி, நேர்மையின்மை அல்லது உரிமையின்மை இருந்தால் பங்கேற்பாளருக்கு(களுக்கு) செலுத்தப்பட்ட எல்லாத் தொகையையும் திரும்பப் பெறலாம் அல்லது அப்படிப்பட்ட வெற்றியாளருக்குச் செலுத்த வேண்டிய பரிசுத் தொகையை செலுத்த மறுக்கலாம்.

## பிற விதிகள்

90. போட்டியில் பதிவு செய்வதற்கும் பங்கேற்பதற்கும் உரிய நடைமுறைகள் இங்கு கொடுக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு உட்பட்டவை. போட்டியின் விதிகளை எந்த ஒரு போட்டியாளரும்(களும்) ஏற்க மறுத்தால், பங்கேற்பிலிருந்து அல்லது வெற்றிபெறுவதிலிருந்து தகுதி நீக்கம் செய்யும்.

91. போட்டியின் எந்த ஒரு பாகத்தைப் பற்றியும் மற்றும் / அல்லது தொலைபேசி அமைப்பின் செயல்பாட்டில், ஆடிஷன்களில், கால்-பேக்குகளில், எந்த ஒரு கட்டத்திலும் போட்டியாளரை(களை) தேர்ந்தெடுப்பதில், எந்த ஒரு கேள்வி அல்லது பதில் தெரிவின் செல்லுமையில் ஏதும் பிழை, தவறான புரிதல் அல்லது சச்சரவு இருந்தால், நிறுவனத்தின் முடிவே இறுதியாகும், எல்லா போட்டியாளரையும்(களையும்) கட்டுப்படுத்தும். இந்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்குள் வராத எந்த ஒரு விஷயத்திலும், நிகழ்விலும் நிறுவனம் / போட்டியின் தயாரிப்பாளர் முடிவெடுப்பதற்கு அதிகாரமுள்ளது.

92. போட்டியை மேம்படுத்த அல்லது நிகழும் வாய்ப்புள்ள எந்த பிரச்சனையையும் தவிர்க்க முன்னறிவிப்பின்றி தன்னுடைய சொந்த முடிவின்படி போட்டி சம்பந்தமான விதிகள் & ஒழுங்குமுறைகளை மற்றும் / அல்லது முன்னோக்கும் விதத்திலோ

அல்லது பின்னோக்கும் விதத்திலோ பங்கேற்பாளரை தேர்ந்தெடுக்கும் வழிமுறையை திருத்துவதற்கான (சேர்க்க, நீக்க அல்லது மாற்றியமைக்க) நிறுவனத்துக்கு உரிமை உள்ளது. மேலும், போட்டியில் பங்கேற்றதன் விளைவாக அல்லது பங்கேற்க முயற்சித்ததன் காரணமாக, போட்டி விலக்கிக் கொள்ளப்பட்டதன் காரணமாக அல்லது விதிகள் / வடிவம் திருத்தப்பட்டதன் காரணமாக எந்த ஒரு பங்கேற்பாளருக்கும் ஏற்படும் எந்த வித இழப்பு அல்லது சேதத்திற்கும் அது பொறுப்பை எடுத்துக் கொள்வதில்லை.

93. பொதுமக்களுக்கு எந்தவித முன்னறிவிப்பும் கொடுக்காமல் போட்டியை முடிக்கும் உரிமை நிறுவனத்துக்கு உள்ளது. போட்டியில் பங்கேற்ற எந்த நபருக்கும் அல்லது நபர்களுக்கும் எந்த விதத்திலும் இழப்பீடு அளிக்கவோ நிகழ்ச்சிக்கான போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட நபரை அல்லது நபர்களை சேர்த்துக்கொள்ளவோ நிறுவனத்துக்கு கடப்பாடு இல்லை,

94. போட்டியில் பதிவு செய்வது என்பதே பதிவு செய்தவர்(கள்) போட்டியில் தொடர தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான உத்தரவாதத்தை அளிப்பதில்லை. பதிவு செய்ததே எந்த போட்டியாளரும்(களும்) ஒரு பரிசைப் பெற அல்லது விருதைப் பெற உரிமையளிப்பதில்லை.

95. (i) IVR, (ii) SMS, (iii) சேனல் (iv) Voot செயலி வழியாகப் பெற்ற அறிவுறுத்தல்களின்படியும், மற்றும் (v) விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின்படியும் பதிவு செய்பவர்(கள்) எல்லா பதிவு வழிமுறைகளையும் நிறைவு செய்ய வேண்டும்.

96. பதிவு செயல்முறையில் பங்கேற்பதே நிறுவனத்திடமிருந்து அல்லது நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எந்த ஒரு மூன்றாம் தரப்பிடமிருந்தும் விளம்பர செய்திகளைப் பெறுவதற்கு பதிவு செய்பவர்(கள்) ஏற்பதாக கருதப்படும்.

97. ஒரு எதிர்பராத தடுக்க இயலாத நிகழ்வினால் போட்டியை நடத்துவது (தொலைபேசி அமைப்புகள், அழைப்பு மைய செயல்பாடுகள் மற்றும் மென்பொருள் அமைப்புகள் சார்ந்த

செயல்பாடுகள் உட்பட (இவை மட்டுமல்ல)), பதிவு செய்வது, எந்த ஒரு காட்சியையும் ஒளிபரப்புவது தடுக்கப்படுமானால், நிறுவனம் போட்டி / காட்சியின் அனைத்து அல்லது எளந்த ஒரு பாகத்தையும் ரத்து செய்யலாம், அடிப்படைச் செயல் அதற்கு சரியெனத் தோன்றும் பிற எந்த முடிவையும் எடுக்கலாம்.

98. போட்டியில் பங்கேற்பாளரின் பங்கேற்பு எதுவாக இருந்தாலும், அவர் பங்கேற்ற பாகத்தை, அல்லது நிறுவனத்தினால் பதிவு செய்யப்பட்ட அவருடைய எந்த ஒரு அல்லது அனைத்து பங்களிப்பையும் நிறுவனம் ஒளிபரப்ப வேண்டும் என்ற எந்த ஒரு கடப்பாடும் நிறுவனத்துக்கு இல்லை.

99. பதிவு, கால்பேக்ஸ், ஆடிஷன்ஸ், போட்டியின் ஸ்டுடியோ பாகத்தைப் பதிவு செய்தல் ஆகியவற்றின் நாள்(நாட்கள்)-ஐ தன்னுடைய சொந்த முடிவின்படி மாற்றியமைக்கும் உரிமை நிறுவனத்துக்கு உள்ளது.

100. போட்டியின் எந்த ஒரு மற்றும் அனைத்து விதிகள் / செயல்முறைகளை வெற்றியாளர்(கள்) மற்றும் / அல்லது பங்கேற்பாளர் மீறியதாக கண்டறியப்பட்டால், அந்த வெற்றியாளர் (ஹாட் சீட் அல்லது FFF) நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற பரிசுத் தொகையை திருப்பிக் கொடுப்பதோடு, நிறுவனத்தினால் சரியானது எனத் தீர்மானிக்கப்படும் தண்ட வட்டியையும் சேர்த்து திருப்பிக் கொடுப்பது உட்பட அத்தகைய நபர்(கள்)-க்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் உரிமை நிறுவனத்துக்கு உள்ளது.

101. பங்கேற்புக்கான விதிகள் & ஒழுங்குமுறைகள் பற்றி போட்டியாளர்(கள்) தெளிவின்றி இருந்தால், அவர் “KOD@colorstamil.in” என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம். அதற்கு பதிலளிக்க நிறுவனம் நியாயமான முயற்சிகளை மேற்கொள்ளும். இருப்பினும், மேற்கண்ட காரணம் நேர நீட்சிக்கான காரணமாக அமையாது.

102. போட்டியில் ஆடிஷன்களை / சுற்றுகளை சேர்ப்பது / குறைப்பது / மாற்றியமைப்பது உட்பட (இவை மட்டுமல்ல) போட்டியின் அமைப்பை மாற்றும் உரிமை தயாரிப்பாளருக்கு உள்ளது.

103. போட்டியாளர்(கள்) போட்டியில் பங்கேற்க வருவது, நிறுவனம் / உற்பத்தியாளர் கோரும் போட்டியாளர் வெளியீட்டுப் படிவம் மற்றும் பிற எந்த ஒரு ஆவணங்களிலும் உள்ள கருத்துக்களை ஏற்று கையொப்பமிடுவது, அத்தகைய போட்டியாளர் வெளியீட்டுப் படிவத்தில் உள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பது மற்றும் இந்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைக் கட்டுப்படுத்தாமல் நிறுவனத்தினால் அவ்வப்போது கொடுக்கப்படும் விதிகள், ஒழுங்கு முறைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பது ஆகியவை போட்டியில் நுழைவது மற்றும் பங்கேற்பதற்கான நிபந்தனையாகும்.

104. நிறுவனத்தின் (அல்லது, பொருந்தும் இடங்களில் நடுவர்களின் முடிவு) முடிவே இறுதியானது. நிகழ்ச்சி / திட்டத்தின் நலன் எந்த ஒரு போட்டியாளர்(கள்) அல்லது பங்களிப்பாளரின் நலனையும் விஞ்சி நிற்கும் என்பதை போட்டியாளர்(கள்) ஏற்கிறார்.

105. போட்டியில் பங்கேற்கும் எல்லா நேரங்களிலும் போட்டியாளர்(கள்) உரிய முறையில் நடந்துகொள்ள வேண்டும் மற்றும் இந்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளையும், ஆடிஷன் மற்றும் / அல்லது ஸ்டுடியோவில் நடப்பில் உள்ள பிற எந்த ஒரு விதி மற்றும் ஒழுங்குமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும். அத்தகைய விதிகளை மீறும் மற்றும் / அல்லது உரிய முறையில் நடந்துகொள்ளத் தவறும் எந்த ஒரு போட்டியாளரையும்(களையும்) போட்டி, ஆடிஷன், ஸ்டுடியோவிலிருந்து தன்னுடைய சொந்த முடிவின்படி அகற்றுவதற்கும் அத்தகைய போட்டியாளரை(களை) தகுதிநீக்கம் செய்வதற்கும் நிறுவனத்திற்கு முழு உரிமை உள்ளது.

106. இந்த விதிகள் & ஒழுங்குமுறைகளை போட்டியாளரால்(களால்) கையொப்பமிடப்பட்ட எந்த மற்றும் அனைத்து வெளியீட்டுப் படிவங்களுடன் சேர்த்து வாசிக்க வேண்டும். போட்டியாளர் வெளியீட்டுப் பவத்திற்கும் இந்த விதிகள் & ஒழுங்குமுறைகளுக்குமிடையே ஏதும் முரண்பாடு இருந்தால், இந்த விதிகள் & ஒழுங்குமுறைகளே முதன்மையானதாக ஏற்கத்தக்கதாக இருக்கும்.

107. எந்த ஒரு ஆயுதமும், ஆல்கஹாலும் அல்லது சட்டத்துக்குப் புறம்பான போதைப்பொருளும் எந்த ஒரு வளாகத்திலும், போட்டியின் எந்த ஒரு கட்டத்தின்போதும் அனுமதிக்கப்படாது. போட்டியாளர்(கள்) நல்ல ஒழுக்கமான நடத்தையுடன் இருக்க வேண்டும். போட்டியில் பங்கேற்கும் அவர்களுடைய திறனைப் பாதிக்கும் எந்த ஒரு மருந்து, போதைப்பொருட்கள் அல்லது பிற உளவியல்சார் மருந்துகளையும் எடுத்துக் கொண்டிருக்கக்கூடாது. தடைசெய்யப்பட்ட எந்த ஒரு பொருளையும் பயன்படுத்துவது தகுதிநீக்கத்திற்கு வழிவகுக்கும்.

108. இந்த விதிகள் & ஒழுங்குமுறைகளின் எந்த ஒரு விதியும் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ எந்த ஒரு நீதிமன்றத்தினாலும் அல்லது பிற தகுதியுடைய அதிகாரியாலும் செல்லாததாக அல்லது நடைமுறைப்படுத்த முடியாததாக ஆக்கப்பட்டால், இந்த விதிகள் & ஒழுங்குமுறைகளின் பிற விதிகள் மற்றும் அந்த விதியின் பிற விஷயங்கள் தொடர்ந்து செல்லத்தக்கதாக இருக்கும்.

109. இந்த விதிகள் & ஒழுங்குமுறைகள் மற்றும் போட்டியானது இந்தியச் சட்டங்களின்படி பொருள் கொள்ளப்பட வேண்டும் சென்னையில் உள்ள நீதிமன்றங்களின் ஆளுகைக்கு உட்பட்டதாக திரும்பப்பெற இயலாதபடி போட்டியாளர்(கள்) உட்பட வேண்டும்.

110. படப்பிடிப்பின்போதும், ஆடிஷன்ஸ் சமயத்திலும் கைப்பேசி எண்களைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட மாட்டீர்கள். அது தகுதிநீக்கத்திற்கு வழிவகுக்கலாம்.

111. பதிவு செய்ததே, போட்டியாளர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது பங்கேற்புக்கு உத்தரவாதமாகாது. அத்தகைய தேர்ந்தெடுப்பு என்பது நிறுவனத்தின் அல்லது அதன் துணைஅமைப்புகளின் சொந்த முடிவுக்கு உட்பட்டதாக இருக்கும்.

112. தற்போதைய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்குள் வராத எந்த ஒரு விஷயத்திலும் நிறுவனம் / போட்டியின் தயாரிப்பாளர் முடிவெடுப்பதற்கு அதிகாரமுள்ளது.

கடப்பாடுகள்

113. போட்டி மற்றும் / அல்லது பரிசு சார்ந்து எந்த விதத்திலும் எந்த ஒரு போட்டியாளரும்(களும்) மற்றும் / அல்லது வெற்றியாளரும்(களும்) எந்த வகையிலும் எந்த ஒரு உடல் காயம், சாவு, மன அதிர்ச்சி அடைந்தால், அதற்கு நிறுவனத்தை மற்றும் / அல்லது சேனலை எந்த வகையிலும் பொறுப்பாக்கவோ மற்றும் / அல்லது கடப்பாடுடையவராகவோ ஆக்க முடியாது.

114. நிறுவனம், தயாரிப்பாளர்கள், நடுவர்கள், ஹோஸ்ட், விளம்பர முகமைகள், நிறுவனத்தினால் போட்டிக்காகப் பயன்படுத்தப்படும் துணை-ஒப்பந்ததாரர்கள், தயாரிப்பு, நிர்வாகம் அல்லது ஆடிஷனை, போட்டியை அல்லது நிகழ்ச்சியை ("உரிய தரப்புகள்") முடிவெடுப்பதுடன் தொடர்புடைய எந்த ஒரு நபர் அல்லது அமைப்பு (நிகழ்ச்சியின் ஃபார்மாட் உரிமையாளர்கள் மற்றும் ஒளிபரப்பாளர்கள் உட்பட) எந்த வகையிலும் போட்டியாளருக்கு(களுக்கு) அல்லது பங்களிப்போருக்கு போட்டியிலிருந்து அல்லது அது சம்பந்தமாக (1) போக்குவரத்தை அளிக்க முடியாதது அல்லது ஆடிஷனுக்கு அல்லது எந்த ஒரு காரணத்துக்காகவாது நடுவர்கள் முன் வந்து நிற்க முடியாதது உட்பட போட்டியின் நிர்வாகத்தினால் (காலவரையீடு செய்தல் உட்பட), (2) ஆடிஷனில் பங்கேற்கும் போட்டியாளரின் அல்லது எந்த ஒரு மூன்றாம் தரப்பினால் அல்லது தேர்ந்தெடுக்கப்படுவதால் அல்லது தகுதிநீக்கப்படுவதால், (3) நடுவர்கள் அல்லது நிறுவனத்தின் முடிவினால், (4) ஹோஸ்டினால் மற்றும் / அல்லது நிறுவனத்தினால் கொடுக்கப்படும் எந்த ஒரு கருத்து, முடிவு, பார்வை, விமர்சனம், மற்றும் / அல்லது அவதானிப்பின் விளைவினால், மற்றும் / அல்லது (5) போட்டி தொடர்பான எந்த ஒரு ஏட்டிலும் ஏற்பட்ட எந்த ஒரு அச்சு, தட்டச்சு அல்லது தொழில்நுட்ப பிழை காரணமாக ஏற்பட்ட எந்த ஒரு இழப்பு, சேதத்திற்கும், அல்லது போட்டியின் எந்த ஒரு கட்டத்திலும் மற்றும் அதன் தயாரிப்பின்போது போட்டியாளருக்கு(களுக்கு) அல்லது பங்களிப்பவர்களுக்கு ஏற்பட்ட எந்த ஒரு மற்றும் அனைத்து உயிருக்கு அல்லது சொத்துக்கு ஏற்பட்ட இழப்பு, சேதம், செலவு,

அல்லது காயத்திற்கும் எந்த வகையிலும் பொறுப்பாக மாட்டார்கள். மேற்கண்ட பொதுவான விஷயங்கள் தவிர்த்து, உரிய தரப்புகள் சொத்துக்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதம் அல்லது, லாப இழப்பு, தொழில், வருவாய், நல்லெண்ணம் அல்லது போட்டி சம்பந்தமாக எதிர்பார்க்கும் சேமிப்பு இழப்பு உட்பட எந்த ஒரு நேரடி, மறைமுக மற்றும் விளைவு இழப்பு அல்லது சேதத்திற்கும் கடப்பாட்டை வெளிப்படையாக விலக்குகிறார்கள். மூன்றாம் தரப்புகள் உட்பட எந்த ஒரு தரப்புக்கும், ஏற்பட்ட எந்த ஒரு மறைமுக, தற்செயலான, விளைவு, அல்லது தண்டனை விதிக்கின்ற சேதங்களும் சேதங்களில் எந்த வகையிலும் அடங்காது, அல்லது போட்டியாளரோடு(களோடு) தொடர்புடுத்தத் தக்க சேதங்களுக்கு, தயாரிப்பாளர் உட்பட உரிய தரப்புகளின் நியாயமான கட்டுப்பாடுக்கு அப்பாற்பட்ட சூழல்களுக்கு உரிய தரப்புகள் கடப்படாது.

115. போட்டியின் வெற்றியாளர்(கள்) மற்றும் / அல்லது போட்டியாளர்(கள்) சேனலையோ, நிறுவனத்தையோ, அதன் தொழிலாளர்களையோ, அதிகாரிகளையோ, துணை-ஒப்பந்ததாரர்களையோ அல்லது தாங்கள் பெற்ற பரிசு சம்பந்தமாக மற்றும் / அல்லது போட்டியில் உள்ள நடைமுறைகள் உட்பட (இவை மட்டுமல்ல) போட்டி அல்லது நிகழ்ச்சி தொடர்பாக எந்த ஒரு நபரையோ தீங்கற்றவர்களாக வைத்துக்கொள்ள சம்மதிக்கிறார்(கள்). எந்த ஒரு சேதத்திற்கும் அல்லது நிவாரணத்துக்காகவும் ஸ்பான்சர் மற்றும் / அல்லது சேனல் / நிறுவனம் / தயாரிப்பாளருக்கு எதிராக இந்தியாவில் எந்த ஒரு நீதிமன்றத்திலும் அல்லது அமைப்பிலும் எந்த ஒரு விண்ணப்பத்தை குற்ற மற்றும் / அல்லது குடிமை நடவடிக்கை எடுக்க நேரடியாக / எந்த ஒரு குடும்ப உறுப்பினர் வழியாக மனுதாரர், விண்ணப்பதாரர் மூன்றாம் தரப்பு வழியாக வழக்குத் தொடுக்காதிருக்க சம்மதிக்கிறார்(கள்).

116. போட்டி / ஸ்டுடியோ இடத்தில் ஆடிஷன் / எபிசோடு / காட்சியின் படப்பிடிப்புக்கு முன்னர் / படப்பிடிப்பின்போது / அதற்குப் பின்னர் அல்லது ஆடிஷன் சமயத்தில் போட்டியாளரின்(களின்) எந்த ஒரு பொருள் இழப்பு ஏற்பட்டால் / களவுபோனால் அதற்கு நிறுவனம் / தயாரிப்பாளர் பொறுப்பாக மாட்டார்.

117. ஆடிஷன் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டால், நிகழ்ச்சிப் பகுதியில் போட்டியாளரின்(களின்) பங்கேற்பதனால் ஏற்படும் எந்த ஒரு ஊதிய இழப்பு, வேலை இழப்பு அல்லது வேறு வகையில் இழப்பு ஏற்பட்டால், அதற்கு நிறுவனம் / தயாரிப்பாளர் அல்லது அதன் எந்த ஒரு துணை அமைப்புகளும் பொறுப்பாகாது.

118. தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் இல்லாத எந்த ஒரு காரணிகள் காரணமாகவும் ஆடிஷன் அல்லது போட்டி எந்த விதத்திலும் குறுக்கீடு அடைந்தால் / நிறுத்தப்பட்டால் / இடையூறு ஏற்பட்டால் அல்லது ரத்து செய்யப்பட்டால் நிறுவனத்தை / உற்பத்தியாளர்களை மற்றும் அதன் துணை-ஒப்பந்ததாரர்களை பொறுப்பாக்க / கடப்பாடுடையவர்களாக்க இயலாது.

119. ஆடிஷன் நடக்கும் இடத்திற்கு வரும் வழியில் எழுந்த அல்லது ஸ்டுடியோ பாகத்தில் / நிகழ்ச்சியில் / படப்பிடிப்பில் அல்லது போட்டியில் கலந்துகொள்ளும்போது எழுந்த எந்த ஒரு இழப்பு, காயம் அல்லது பிற எந்த கடப்பாட்டுக்கும் எந்த ஒரு போட்டியாளருக்கும்(களுக்கும்) மற்றும் / அல்லது பங்களிப்பவருக்கும்(களுக்கும்) நிறுவனத்தை / தயாரிப்பாளரை மற்றும் அதன் துணை-ஒப்பந்ததாரர்களை பொறுப்பாக்க இயலாது. இதற்காக, போட்டியாளர்(கள்) மற்றும் பங்களிப்பவர்(கள்) ஒரு பிணைகாப்பில் நிறுவனத்துக்கு சார்பாக கையொப்பமிட வேண்டும். தேர்ந்தெடுப்பு செயல்முறையில் போட்டியாளர்(கள்) ஈடுபட்டதன் காரணமாக அல்லது அதிலிருந்து எழும் எந்தவித மற்றும் அனைத்துக் கோரிக்கைகள், நடவடிக்கைகள், சேதங்கள், கடப்பாடுகள், இழப்புகள், செலவுகளிலிருந்து விடுவிக்கவும் நிறுவனம் அல்லது அதன் எந்த ஒரு கூட்டு முகமைகள் மற்றும் அவர்களுடைய அலுவலர்கள், இயக்குநர்கள், முகவர்கள், பிரதிநிதிகள் மற்றும் தொழிலாளர்கள் மற்றும் / அல்லது எந்த வகையிலும் போட்டியோடு தொடர்புடைய பிற எந்த ஒரு முகமைகள் அல்லது தனிநபர்களுக்கு எதிராகவும் வழக்கு தொடராதிருக்கவும் போட்டியாளர்(கள்) மற்றும் பங்களிப்பவர்(கள்) ஏற்று அவர்களை விடுவிக்க சம்மதிக்கிறார்கள்.

120. ஆடிஷன் / போட்டியல் பங்கேற்கும்போது நிறுவனம் அல்லது அதன் துணை அமைப்புகள் செயல்பட்டதால் அல்லது செயல்படாதிருந்ததால் எழும் எந்த ஒரு கோரிக்கையிலிருந்தும் நிறுவனத்திற்கு அல்லது அதன் துணை அமைப்புகளுக்கு சட்டவிலக்களிக்க போட்டியாளர்(கள்) இதன் மூலம் சம்மதிக்கிறார்கள்.

121. தொலைக்காட்சி போட்டி “கோடீஸ்வரி - 2019”-ல் பங்கேற்கும் உரிமை தவிர்த்து, போட்டியாளர் அல்லது அவருடைய சட்ட வாரிசுக்கு நிறுவனத்துக்கு அல்லது தயாரிப்பாளர்களுக்கு எதிராக பிற எந்த உரிமையும் இல்லை. தெளிவுக்காக, ஆடிஷன் அல்லது போட்டிக்கான போட்டியாளருக்கு(களுக்கு) எந்த வித தொகையும் செலுத்தப்படாது.

122. “கோடீஸ்வரி - 2019” போட்டியில் நுழைவதற்கான ஒரே வழி விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளில் விவரிக்கப்பட்டுள்ள பங்கேற்பு வழி மட்டுமே. போட்டியில் நுழைவதற்கு வேறு வழி இல்லை. இந்த ஒட்டுமொத்த வழிமுறையும் வெளிப்படையானது, ஒரு தனித்த மதிப்பீட்டாளரால் கண்காணிக்கப்படுகிறது. நீங்கள் பணமோ பொருளோ அளித்தால், நீங்கள் வெற்றி பெற உதவ முடியும் என்று கூறிக்கொள்ளும் எந்த ஒரு நபரும் உங்களை ஏமாற்றுகிறார். தயவுசெய்து உங்களுடைய உள்ளூர் காவல்துறையைத் தொடர்புகொண்டு இந்த நபரைப் பற்றி உடனடியாக தெரிவியுங்கள்.

123. பயனருக்கு நிறுவனம் எந்த ஒரு கடப்பாட்டையும் கொண்டிருக்காது. போட்டி சம்பந்தமாக எந்த வித கடப்பாட்டையோ உரிமைகளையோ கொண்டிருக்காது. தேர்ந்தெடுப்பு செயல்முறை அல்லது போட்டியை நடத்துவது சம்பந்தமாக நிறுவனத்துக்கு எதிராக எந்த வித கோரிக்கையையும் எழுப்ப இயலாது.

124. நிறுவனம் இவற்றுக்குப் பொறுப்பாகாது:

I. பதிவு தொடர்பாக எந்த வித டெலிவரி, தோல்விகளுக்கு அல்லது வீடியோக்களை / பிரசன்டேஷன்களை பதிவேற்றுவதற்கு;

II. எந்த ஒரு தரவையும் காட்சி மேலாண்மை பெறாதிருப்பதற்கு அல்லது நிராகரிப்பதற்கு;

III. எந்த வித இழந்த, தாமதமான அல்லது தவறாக அனுப்பப்பட்ட கணினி டிரான்ஸ்மிஷன் அல்லது நெட்வொர்க், எந்தவித மின்னணு தோல்விகள் அல்லது டிரான்ஸ்மிஷன் தோல்வி அல்லது எந்த வித தொழில்நுட்ப பிரச்சனைகள் காரணமாக நுழைவுகளைப் பெறுவதில் எந்தவிதமான தோல்விக்கும் மற்றும்

IV. தன்னுடைய கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட பிற நிலைகள் /சூழல்களுக்கு.

விதிகள் மற்றும் நிபந்தனைகள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு பின்னர் தமிழில் மொழிபெயப்பு செய்யப்பட்டது. தமிழ் மற்றும் ஆங்கில விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கிடையே விதிகளின் விளக்கத்தில் எந்த முரண்பாடும் இருந்தால், ஆங்கில விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் விளக்கமே கருத்தில் கொள்ளப்படும்.

<u>உரிமைகோராமைகள்</u>

125. செயலியும் வலைதளப் பக்கமும் எந்தவிதமான உத்தரவாதமும் இல்லாமல் “அப்படியே” கொடுக்கப்படுகிறது. சட்டப்படி எவ்வளவு அதிக அளவு அனுமதிக்கப்படுகிறதோ அந்த அளவுக்கு விற்கப்படும் தன்மைக்கான உட்கிடையான உத்தரவாதங்கள், ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கான தகுதி மற்றும் மீறல் அல்லாத தன்மை உட்பட (இவை மட்டுமல்ல) எல்லா உத்தரவாதங்களுக்கும், அது வெளிப்படையாகவோ, அல்லது மறைமுகமாகவோ எந்த வகையிலும் வெளிப்படையாகவே பொறுப்பேற்பதை நிறுவனமும் காட்சி மேலாண்மையும் மறுக்கிறது. மேற்கண்டதை கட்டுப்படுத்தாமல், குறிப்பாக (a) செயலி அல்லது வலைதளம் தடையற்றது அல்லது பிழையற்றது என்றோ (b) குறைகள் சரிசெய்யப்படும் என்றோ, (c) செயலியில் மற்றும் வலைளத்தில் வைரஸ்களோ அல்லது பிற தீங்களிக்கும் விஷயங்களோ இருக்காது என்றோ, (d) சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பாதுகாப்பு சம்பந்தமாகவோ, மற்றும் (e) சரியானதன்மை, துல்லியம் அல்லது நம்பகத்தன்மை பற்றியோ எந்தவித உத்தரவாதத்தையும் நிறுவனம் மற்றும் காட்சி மேலாண்மை உரிமை மறுப்பு செய்கிறது. வலைதளத்தை, ஆன்லைன் நுழைவுப் படிவத்தை ஆடிஷனீ பயன்படுத்துவதால், ஆடிஷனீயின் அல்லது மற்றொருவரின் சாதனத்தை அல்லது தரவை சர்விஸ் செய்யும் தேவை அல்லது

மாற்றும் தேவை எழுமானால், இந்தச் செலவுகளுக்கு நிறுவனமும் மற்றும் காட்சி மேலாண்மையும் பொறுப்பாகாது.

126. இந்தக் காட்சியில் பங்கேற்பது என்பது இலவசமானது, பங்கேற்கும் நோக்கத்திற்காக பணத்தையோ அல்லது வேறு இணையான பொருளையோ கோரும் எந்த ஒரு நபருக்கு அமைப்புக்கு எதிராகவும் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளும்படி எல்லா பார்வையாளர்களும் / ஆடிஷனீ(கள்)-ம் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். காட்சி மேலாண்மை அத்தகைய நடவடிக்கைகளை வெறுக்கிறது, அதற்கு எல்ல பொறுப்புகளையும் ஏற்க மறுக்கிறது. இது சம்பந்தமாக செலுத்தப்பட்ட எந்த ஒரு தொகைக்கும் எந்த ஆடிஷனீக்கும் காட்சி மேலாண்மை கடப்பாடு கொண்டிருக்காது.

## பின்னிணைப்பு 1 - SMS மற்றும் IVR-கான தொலைத்தொடர்பு நிறுவனங்கள் மற்றும் சர்க்கிள்கள்

IVR-க்கு கீழே உள்ள பட்டியலைப் பார்க்கவும்

| வ.எண் | ஆப்பரேட்டர்களின் பட்டியல் |
|---|---|
| 1 | வோடா∴போன் இந்தியா |
| 2 | ஏர்டெல் இந்தியா |
| 3 | ஐடியா இந்தியா |
| 4 | பிஎஸ்என்எல் இந்தியா |

| வ.எண் | வோடா∴போன்-இந்தியா | ஏர்டெல்-இந்தியா | ஐடியா-இந்தியா | பிஎஸ்என்எல்-இந்தியா |
|---|---|---|---|---|
| 1 | ஆந்திரப் பிரதேசம் | ஆந்திரப் பிரதேசம் | ஆந்திரப் பிரதேசம் | ஆந்திரப் பிரதேசம் |
| 2 | சென்னை | சென்னை | கர்நாடகா | கர்நாடகா |
| 3 | கர்நாடகா | கர்நாடகா | கேரளா | கேரளா |
| 4 | கேரளா | கேரளா | மும்பை | மகாராஷ்டிரா |
| 5 | மும்பை | மும்பை | தமிழ்நாடு | தமிழ்நாடு |
| 6 | தமிழ்நாடு | தமிழ்நாடு | | |

எஸ்எம்எஸ்-க்கு கீழே உள்ள பட்டியலைப் பார்க்கவும்

| ஆப்பரேட்டர்களின் பட்டியல் |
|---|
| ஏர்டெல் |
| ஓடா∴போன் |
| ஐடியா |
| தெரியாத |

| சர்க்கிள்களின் பட்டியல் |
|---|
| ஆந்திரப் பிரதேசம் |
| அஸ்ஸாம் |
| பீகார் |
| சென்னை |
| டெல்லி |
| குஜராத் |
| ஹரியானா |
| ஹிமாச்சல பிரதேசம் |
| ஜம்மு & காஷ்மீர் |
| கர்நாடகா |
| கேரளா |
| கொல்கத்தா |

| |
|---|
| மத்திய பிரதேசம் |
| மகாராஷ்டிரா |
| மும்பை |
| வட கிழக்கு இந்தியா |
| ஒடிசா |
| பஞ்சாப் |
| ராஜஸ்தான் |
| தமிழ்நாடு |
| தெரியாத |
| உபி கிழக்கு |
| மேற்கு வங்காளம் |